சம் யிவிடத்தில் மேல் அகோபிலம் கீழ் அகோபிலம் யென்றுரெண்டு ஸ்தலம் யிருக்குது வொன்னுக்கொன்னு நாலுநாழிவழி தூரம்மத்தியில் யிருண்டகாடு மேல்அகோபிலத்துக்கு மேலே மலையின் பேரில்யெழுகு ஸ்தம்ப மென்று வொரு ஸ்தம்பத்தொடுங் கூடிய புண்ணியஸ்தலம்யிருக்குது அவிடத்துக்கு காட்டுக்குள்ளெவழி போகுது அதிலெ யாதொருசவாரிகளும் போக மாட்டாது-அது நரசிங்கமூர்த்திவுற்பத்திஸ்தலம்மேல்அகோபிலத்து தேவாலயத்திலும் கீழ்அகோபிலத்துதேவாலயத்திலும்நரசிங்கமூர்த்திவிக்கிரகங்களை அனேக அவசரங்களாய்செய்விச்சுஆருதிக்கிறார்கள்-யிந்தஸ்தலம்கும்பகோணத்தண்டையில் யிருக்கும்-அகோபில சீயர்ஆதீனம்-அவருடையமுத்திரைகர்த்தா கீழ் அகோபிலத்துக்குநாலுநாழிவழியுள்ளபாசேபல்லெயென்கிறவூரில் யிருந்துக்கொண்டுயிந்தமகாஸ்தலவிசாரணைபண்ணிக்கொண்டுயிருக்கிறார்யிந்தரெண்டு ஸ்தலத்திலும் ஆருதனைக்கு ரெண்டுபேர்-அர்ச்சகாளைமுத்திரைகர்த்தாமாசம் வொண்ணுக்கு ஆறுரூபாய்சம்பளத்தில்அப்போதைக்கப்போயேற்படுத்திக்கொண்டுவருகிறார் ஆலயசிலவுகளுக்கு-ரூசாசெந்துலாலாவருஷம்வொன்னுக்கு-ஆயிரம் ரூபாய் விழுக்காடு யிப்போசிலவருஷமாய்குடுக்கிறதும்-சீயர்அனுப்புகிறதிரவ்வியமும் தவிரயிந்தமகாஸ்தலங்களுக்கு-வேறொருஆதாரவுமில்லைகீழ்-அகோபிலத்தில்குத்திரகுடிசைகள்யிருக்குது.மேல்அகோபிலத்தில் அதுவும்யில்லை ஜெனங்கள் தேவாலயத்தில்தங்கவேணும்வெகுகாட்டுப்பிரதேசம்யிவிடத்தியஜெலம்ரோகங்களைவுண்டாக்கப்பட்டது மிருகபயம்வுண்டுகோவில்மிகவும் கிலப்பட்டு யெருக்குநெரிஞ்சிமுதலானசெடிகள்முளைச்சிருக்குது யிவிடத்தில் பங்குனிமாசத்தில் பிறம்மோச்சவம்நடக்குது-அப்போவருகிறசெனங்களாலெ நூறுவராகன்மட்டுக்கும்வருலாகுது அதுகளைகந்தனூர் நவாபுவாங்கிக் கொள்ளுகிறார். ஆலயத்தையெவ்வளவும்விசாரிக்கிறதில்லை யிவிடத்தல் பிறதி பலிச்சிருக்கிற பரமாத்துமாசொயம்பிறகாசத்தினாலெ வுலகத்தாருக்குபக்தியை வுண்டாக்கிறாரேயல்லது சிறுஷ்டி கோடிகளினுடைய ஆருதனைவுபசாரங்கள்யெவ்வளவும்வுதவியாயிருக்கயில்லையிந்தரெண்டுஸ்தலத்திலும்யெந்தபதார்த்தமும்கிடையாதுகையில்யிருந்தவஸ்துக்களாலெகீழ் அகோபிலத்திலேயிருக்கிறவிக்கிரகங்களை ஆருதனைசெய்விச்சேன்சமஸ்தமான போசனபதார்த்தங்களும்பாசேபல்லெயில்யிருந்து அழைப்பிச்சுகொள்ள வேணும்பாசேபல்லெயென்கிறவூர் கும்பினியார்அதிகாரத்துக்குவுள்பட்டது நல்லவூர்.

காசியாத்திரைச்சரித்திரம்.

௰௨ பகல் ஒருமணிக்கு புறப்பட்டு-௬-மணிக்குயிதுக்கு-௧-காதவழியுள்ள ஸ்ரீரங்காபுரத்தைச்சேர்ந்தேன்- நல்லவழி. ஆனால் மிகுந்தகாடு. வழியில் ருத்திறவரம்பென்கிற வொருபஸ்தியானவூர்யிருக்குது. அதுகடப்பைசில்லாவுடனே சேர்ந்தது. பெரிதானபேட்டைஸ்தலம். தேவஸ்தானத்துக்கள் அகப்படும் சாப்புகடைகளும் பிறம்மணாள்வீடுகளும்யிருக்குது. ஸ்ரீரங்காபுரமெனகிறவூர் கும்பினியாருது. சின்னவூரானபோதிலும் பஸ்தியாயிருக்குது. வீடுகள்சிறுசு. ஜெலசவுக்கியமில்லை.

௰௩ உதயத்துக்குமுன்ராத்திரி-௩-மணிக்குப்புறப்பட்டு காலமே-௯-மணிக்கு யிதுக்கு ௧௦-காதவழியுள்ள மகாநந்தியென்கிற புண்ணியஸ்தலத்தைச்சேர்ந்தேன. நல்லவழி. மகாதேவ்புரம் பசுவாபுரம்யென்கிற பஸ்தியானவூர்கள் வழியிலேயிருக்குது. யிந்தஸ்தலம் நெருக்கமானகாடு. மலைகள் நடுவேயிருக்குது. ஆலயத்தைசுத்திலும் பழவர்க்கவிருட்சங்கள்யிருக்குது. ஒருகுடியிருப்புகுடிசையாவது சமீபத்திலேயில்லை. சகலபதார்த்தங்களும் பசுவாபுரத்திலேயிருந்துகொண்டு வரவேணும். மனுஷாள்ராத்திரியில் யிந்தஸ்தலத்தில் யிருக்கக்கூடாதுயென்கிற நியமம்வுண்டு. சோசாயிகள் பயிராகிகள்மாத்திரம் ரெண்டுமூணுநாள் யிந்தஸ்தலத்திலியிருந்து செபம்பண்ணுகிறார்கள். ஆலயத்தில் லிங்கத்தின்கீழே தீர்த்தம் பிறவாகிச்சு வொருதொட்டியில்தங்கி அப்புறம்போகுது. தீர்த்தம் ரம்மியமாயிருக்குது. யிது சாஸ்திரசித்தமான புண்ணியஸ்தலம். அர்ச்சகன் தம்பளசாதி. வரப்பட்டவாள்யெல்லாரும் சுதாவாய் லிங்கத்தைத்தொட்டு ஆறாதிக்கிறார்கள். அர்ச்சகன் நாள்தோறும் வுதயமானசாமததுக்குவந்து கோவில்கதவைத்திறக்கிறான்.

பகல் - ௩ மணிக்குப்புறப்பட்டு ௬ மணிக்கு யிதுக்குக்காதவழியுள்ள பண்டாதகூறுயென்கிறவூரைச்சேர்ந்தேன். வழி கல்பாங்கு. முள்ளுகள் விஸ்தாரம். காடுயில்லை. வொருசின்ன ஆறும் சிலகால்வாய்களும்தாண்டவேணும். யிந்தவூர்களக்கிறமம். கந்தனூர்நவாபுது. சகலபதார்த்தங்களும் அகப்படும். வீடுகள்பெரிசு. யிவட்த்தில்பசுவின்பால் கறக்கிறதில்லை- கன்னுகளை மேய்ச்சலுக்கு பசுக்களுடனே வோட்டுகிறார்கள். யெருமைக்கறவல். குடியிருப்புவீடுகளைப்பார்க்கிலும் செவ்வையாய் மாட்டுத்தொழுங்கள் கட்டியிருக்கிறார்கள். நெல்லுவிளைச்சல்மட்டு. புஞ்சைதானியம் விஸ்தாரம்பயிரிடுகிறார்கள். சூத்திராளுக்கு மிகவும்கஷ்டப்பட்டு பயிரிடுகிறசுபாவம்வுண்டு. பிறம்மணாளுக்கு ஜீவனம் பூர்ணமாயிருக்குது.

௰௪ உதயத்துக்குமுன் ௪ மணிக்குப்புறப்பட்டு ௰ மணிக்கு யிதுக்குகாதவழியுள்ள வெலபனூரைச்சேர்ந்தேன். நல்லவழி. ஆனால் களிப்பாங்கு. காடுஅதிகமாயில்லை. யிந்தவூரில் செலசவுக்கியம்யில்லை. பெரியவீடுகளும்சவுளிக்கடைகளும்யிருக்குது. சகலவஸ்துக்களும் அகப்படும். யோக்கியமானபிறம்மணாளும் நவாபுவுத்தியோகஸ்தாள் சிலபேரும்யிருக்கிறார்கள். கிறமகணக்குசேஷீப்பாயெனகிறவர் அன்னதானம்செய்கிறார். தற்யிஷ்டர். யிதுக்கு அஞ்சகோசதூரத்தில் ஓங்காரம்யென்கிறபுண்ணியஸ்தலம் காட்டினடுவேயிருக்குது. அந்தஸ்தலத்திலேயிருக்கிறதீர்த்தத்தில்ஸ்நானஞ்செய்து செலத்துக்குள்ளேகூடணப்பொழுதுதலையைவைச்சுக்கொண்டுயிருந்தால் ஓங்காரசப்தம் கேழ்க்குதுயென்றுசொல்லுகிறார்கள்.

பகல் ௨ மணிக்குப்புறப்பட்டு ௫ மணிக்குயிதுக்குக்காதவழியுள்ள வெம்பெண்டாயென்கிறவூரைச்சேர்ந்தேன். வழியில்காடும் மிறுகபயமும்வுண்டு. பருக்காங்கல்லும் களிமண்ணும் கலந்தபூமி. யிந்தவூர்நவாபுது. சர்க்கார்கட்டுப்பாடுயில்லை. வீடுகள்சிறுசு. முசாபர்களுக்குவேண்டிய சாமானுகள் விஸ்தாரம் அகப்படாது.

௰௩உ காலமே ௪ மணிக்குப்புறப்பட்டு ௯ மணிக்கு யிதுக்குகாதவழியுள்ள ஆதம்கூற்யெனகிறவூரைச்சேர்ந்தேன். நல்லவழி. காடு அதிகயில்லை. யிதுகந்தநூர்நவாபுதாலூகா. நல்லபேட்டைஸ்தலம். ஆதிவாரந்தோறும் சந்தைகூடுகிறது. அதில்சகலவஸ்துக்களும் அகப்படுமென்று கேழ்வி. அனால் சந்தையில் பாட்டைசாரிகளுக்கு வுபயோகமானவஸ்துகள் யிகுதியாய் கிடையாது. யிந்தவூரில் ஸ்ரீசைலத்து அர்ச்சகாளும் யாத்திரைவந்தவர்களிடத்தில் தீர்வைப்பணம் வாங்கிக்கொள்ளுகிற நவாபுமுசத்திகளும் யிருக்கிறார்கள். அந்தபணம் கந்தநூர்நவாபைச்சேருது. ஆதம்கூறில்வாசம்பண்ணுகிறவாள் ஸ்ரீசைலயாத்திரைக்குவருகிற பலவிதமான மனுஷாளுடனே பழக்கப்பட்டவர்களாகையால் அவர்கள் பயமும் பாரமார்த்திகமும்யில்லாமல் அலட்சியபுத்தியுள்ளவர்களாயிக்கிறார்கள். யிந்தவூரில் பிரமராம்பிகைதேவிஅர்ச்சகாள்ரெண்டுவீட்டுக்காறர் தெலுங்கு பிராம்மணாளும் சுவாமி அர்ச்சகனானவொரு ஜங்கமனும்தங்கள்வீடுகளில்பாட்டைசாரிகளுக்குயிடம்கொடுக்கிறார்கள். மத்தவர்கள் வீடுகள்பெரிசாய்கட்டிக்கொண்டிருந்தாலும் யிடம்கொடுக்கிறதில்லை யிரண்டுமூணு சின்னதேவாலயங்களிலும் சாவடியிலும்தான வந்தசெனங்கள்யிறங்கவேணும். ஆதமகூறுக்கும் ஸ்ரீசைலத்துக்கும் நாலுகாதவழி மத்தியில்கிலவூர்கள்யிருந்தும்சாமானுகள் வொண்ணும் அகப்படாது. ஆதமகூறில்யிருந்து ஸ்ரீசைலம்போய்வருகிறவனைக்கும் வேண்டிய சாமானுகள் மறக்காமல்கொண்டுபோகவேணும். ஆதமகூறில்யிருந்து பட்டணத்துசவாரிகள் ஸ்ரீசைலத்துக்குபோகிறதுவருத்தமென்றுதெரிஞ்சு மூணுடோலிகள் ரெண்டுரூபாய்க்குசெவிச்சேன் யிவிடத்துதச்சன் வொருதினத்தில்செய்தான். சென்னபட்டணம் ரூபாய் வொண்ணுக்கு யிவிடத்திய ரூபாய்வொண்ணேகால். ஸ்ரீசைலம்போய்வருகிறத்துக்கு யிவிடத்துபோயிகள் யெட்டுபேரை ஆளொண்ணுக்கு நாலுரூபாய்கூலி யேர்படுத்திக்கொண்டேன். நான் ஸ்ரீசைலபர்வதத்துக்குகூடயிட்டுக்கொண்டுபோன பரிசெனங்கள்விவரம். மேல்செய்விச்சரெண்டுடோலிகளில் வொருடோலியைச்சுமக்கயென்னுடையவுப்பாடாபோயிகள் யெட்டுபேர். அவர்களுடையபோசனசாமானுகளைக்கொண்டுவர வுப்பாடாபோயிகள் மூணுபேர் யென்பொசனசாமானுகள்கொண்டுவர காவடிக்காறர் ஆறுபேர் சேவகர்நாலுபேர் சேவகருக்கும் காவடிக்கரறனுக்கும் போசனசாமானுகள்கொண்டுவர வொருகாவடிக்கரறன் பிராம்மணாள் பதினஞ்சுபேர் ஆகடரிசெனம் முப்பத்தேழுக்கும் அஞ்சுநாளைக்கு போசனசாமானுகள் யிந்தவூரில்வாங்கிக்கொண்டேன். கந்தனூர்நவாபு தன்தேசத்தை நாலுபிறிவாக்கி நாலு அமுல்தாறர்களை யேர்படுத்தியிருக்கிறார். சிலதாலூக்காவை தன்னிடவுத்தியோகஸ்தாள் சம்பளத்துக்குயீடாக சாகீராய்குடுத்திருக்கிறார். அந்த நவாபு கும்பினியாருக்கு வருஷம் வொண்ணுக்கு லட்சம்ரூபாய்தீர்வை குடுக்கிறார் யிந்ததேசம் டல்லாரிசில்லாகலக்டர்அதிகாரத்துக்குவுள்பட்டது அந்தகலக்டர்துருப்பில்ஒருவக்கீல்கந்தனூர்நவாபுயிடத்தில்யிருக்கிறான். நவாபு தன்தேசத்தாருக்கு நியாயம்விளங்கசொந்தமாய் வொருகாசிகோர்டுவைச்சிருக்கிறார். யிந்த தேசத்தார்கும்பினியாருடையகோர்டுகளுக்கு போகவேண்டியநிமித்தியம்யில்லை. யிந்தநவாபுவுத்தியோகஸ்தாளுக்குகிறமமாய்சம்பளஞ்சேருகிறதில்லையென்றுமிகவும்புகாறுவாயிருக்குது. யெல்லாருக்கும்சம்பளம்கொஞ்சம். அமுல்தாறர்களின்மேல் அகபந்திவிஸயென்றுவொருவுத்தியோகஸ்தனை வைச்சிருக்கிறபடியால்வேலைகளைமுனைந்துபார்க்கயாருக்கும்சுதந்தரம்யில்லாமலிருக்குது.

௰௫உ உதயத்துக்குமுன் ௫ மணிக்குபுறப்பட்டு ௮ மணிக்குயிதுக்கு ௫ கோசுதூரமுள்ள நாகுலொட்டியென்கிற ஆலயத்தைச்சேர்ந்தேன். நல்லவழி. வெளியாயிருக்குது சவாரிகளும் மனுஷாளும் சாதாரணமாய்நடக்கலாம் மத்தியில்ருதாபுரம் கிஷ்ணபுரம் வெங்கடாபுரம் சித்தாபுரம் யென்கிறவூர்கள்யிருக்குது. அதுகள்மிகவும்சின்னவூர்கள் அதுகளிலே செஞ்சுவாறுயென்கிறவே

டரும் யிதரமானவர்களும் குடியிருக்கிறார்கள். வெங்கடாபுரமுதல் ரெண்டுபக்கமும் நெருங்கிய காடு. சித்தாபுரத்தில் செஞ்சுவாறுக்காக நவாபுமனுஷாள் ஆளொண்ணுக்குமூணுபெரியதுட்டு தீர்வைவாங்குகிறார்கள். யிதுகெபெரியதுட்டைடப்புயென்றுசொல்லுகிறார்கள். அதுகள் கால்அணாயாய் அனாருபாய்யிதுகள் அகப்படாது. யிவிடத்துடப்புகள் மாத்திரம்வைச்சுக்கொண்டுதான் செலவுபண்ணவேணும். அருசிவாண்ணுக்குமூணுடப்புகள். யிந்தடப்புகள் பட்டணம் லிங்கசெட்டிதுட்டுபோலேதேனுசயிருக்குது. நாகலோட்டியிலயிறங்கிறயாத்திரைசெனங்கள் வேட்டையாடவருகிற சித்தாபுரத்துவேடராத்தான்காணலாம். யிங்கேயிருக்கிறவீரபத்திரசுவாமி ஆலயம் செனங்கள்யிறங்கயோக்கியமாயிருக்குது. செலசவுக்கியம்வுண்டு. வொருஜங்கமசாதி அர்ச்சகன்ஆத்மகூறிலேயிருந்து வாரத்துக்குரெண்டுதிரம்வந்து யிந்த ஆலயத்தில்பூசைசெய்கிறான்.

பகல் ௨ மணிக்குபுறப்பட்டு ௬ மணிக்குயிறாக்கு ௫ கோசதூரமுள்ள பெத்தசெருவுயென்கிறவூரைச்சேர்ந்தேன். வழியில் முதல்வொருகோசதூரம் படிகள்விமரிசையாய்கட்டியிருந்தாலும் கவிடமானமலையேத்தமும் யிறக்கமுமாயிருக்குது. பின்புவொருகோசதூரம் மலையேறியிறங்கிறதுவெகுசிறயாசை. அப்பால்ரெண்டுகோசதூரம்யேத்தமும் யிறக்கமும் யில்லாதிருந்தாலும் வழிகவைமயமாயிருக்குது. ரெண்டுபக்கமும்நெருங்கினகாடு டோலிகளின்மேல் செடிகிளைகள்பட்டுக்கொண்டிக்குது. அந்தகல்பாறு தாண்டினபிற்பாடு பெத்தசெருவுவூர்வரைக்கும் வழிகுதிரைவண்டிகள்போகும்படி விசாலமாயிருக்குது. பெத்தசெருவில்யிருந்து மறுபடி நாகலோட்டிக்குபோகும்போது ரெண்டுமூணுவழிகள்பிரியுது. அங்கேசெஞ்சுவார் சகாயம் யில்லாவிட்டால் வழிதப்பிப்போம். வலதுபக்கம்பிரிவாகிய வழிகளைவிட்டு யிடதுபக்கம்பிரியுறவழியைப்பிடிச்சால் நாகலோட்டிசேரலாம். பெத்தசெருவைத்தவிர ஸ்ரீசைலம்சேருகிறபரியந்தம் யெங்கும் செலசவுக்கியமானயிடம்யில்லை. பெத்தசெருவில் பண்ணிகிளைக்கட்டுகிறத்துக்குபோதுமானதாய்யிருவதுவேடக்குடிசைகள்யிருக்குது அதுதவிரவேறேநிழலில்லை. யிந்தவூர்யேரியில் கொண்ணூர்செலத்துக்கு சமானமானசெலம்கண்டேன். யாத்திரைக்குவரப்பட்டயெல்லாரும யேரிகரையின்பேரில் சமயல்பண்ணி போசனமசெய்துக்கொள்ளவேணும. மழைவந்தால் மேற்சொன்னகுடிசைகளிலே தான்யிருக்கவேணும். யிந்தவூரில்வேடருக்குயெச்மானனாக நாயக்கனென்றுபேரிட்டுக்கொண்டு வொருதர்மிஷ்டன்யாத்திரைக்காறரிடத்தில் நவாபு ஆக்கினைப்பிறகாரம ஆளொண்ணுக்குமூணுடப்பு கட்டணமவாங்கினாலும பட்டிணியாயிருக்கிறவர்களுக்கு அரிசியும பாத்திரங்களுமகுடுத்து சமயல்செய்துகொள்ளுங்களென்று வுபசாரமசெய்கிறான். யிந்தமார்க்கமாய் ஸ்ரீசைலமபோய் வருகிறவாளுக்கு விதியில்லாமல் யிவடத்தில்யிறங்கவேண்டியிருக்குது. நான்மறுபடிவருகிறத்துக்குள்ளாக பத்துரூபாயில் வொருசாவடிவிசாலமாய்க்கட்டலாமென்று அந்தநாயக்கன்முதலானவர்களாலே தெரிஞ்சபடியால் யிவிடத்துவழக்கப்படிக்கு மூங்கில்தடுக்கினால் செவிர்கள்வைச்சு கட்டும்படி அந்தநாயக்கன்கையில் பத்துரூபாய்குடுத்தேன். யிவிடத்தில்மூங்கில்காடுஅதிகமாயிருக்கிறபடியினாலேயும மூங்கில்தடுக்குகள் மண்ணுசவிரைப்பார்க்கிலும்பலமாயிருக்கிறபடியினாலேயும காட்டுமரசாமானுகள் விஸ்தரிசசுலயமாய் அகப்படுகிறபடியாலும நானகுடுத்துவந்தனுகையில் வொருசாவடிவிசாலமாய்கட்டலாமென்றுதோணுது. யிந்தராத்திரிகுந்சகுளிரும சாத்துமமழைதூறலுமாயிருந்தபடியால்வொருகுடிசையில்யிருந்தேன்.

௴௨௨ உதயத்துக்குமுன் ௫ மணிக்குப்புறப்பட்டு ௰௨ மணிக்குயிறாக்கு ௫ கோசதூரமுள்ள ஸ்ரீசைலத்தைச்சேர்ந்தேன. ஸ்ரீசைலத்துக்குவரநாலுவழியிருக்குது. யெப்படிவந்தாலும் யீசுவரசங்கல்பம்யென்னமோநாலுகாதவழிபெருங்காடாயிருக்குது. வொருமார்க்கம்நெல்லூ

ரின்மேரிலும் மத்தொருமார்க்கம் கம்பம் தூபாட்டியின்மேரிலும் வந்து சுக்கல்பறவதம் யேறவேணும். மத்தொருவழி மேற்குதேசத்தாள் கிஷ்ணநதிதாண்டிவரவேணும். கிஷ்ணையை பாதாளகெங்கையென்று சொல்லுகிறார்கள். அந்தமகாநதி ஸ்ரீசைலத்தின் அடிவாரத்தில் பிறவாகிக்குது. ஸ்ரீசைலத்திலேயிருந்து அந்தமகாகெங்கைக்குப்போகவேணுமானால் ரெண்டுகோசு தூரம மலையிறங்கியேறவேணும சிலதூரம் டோலியின்மேரில் சுளுவாயப்போகலாம. படிகள் வுசத்தியாகையால் யேறியிறங்கிறது பிறயாசமாயிருக்குது. நான்வந்த ஆதமகூர் வழிதவிர மத்தமூணுவழியிலும் வுச்சவகாலமல்லாத மத்தகாலங்களிலெபோகக்கூடாது. அந்தமார்க்கங்களில் மிறுகபயமும் வேடர்பயமும் அதிகம். யிந்தவேடர் காட்டுமனுஷர்களானாலும் யாத்திரைவரப்பட்டவர்களை யாசிச்சுவாங்கி வழக்கப்பட்டவர்கள். பெத்தசெருவைத்தாண்டினவுடனே மலையேறத்தொடங்கவேணும. வொருகோசு தூரமயேத்தமும் யிறக்கமுமாய் படிகள்செவையாய்கட்டியிருக்குது. மிகவும்பிறயாசையில்லை. ரெண்டுபக்கமும்காடு. அப்பால்வொருகோசு தூரம் பூமிசமமாயிருக்குது. ஆனால் கல்பாறு. அதுக்கு அப்பால் பீமுனிகொல்லம்யென்கிற ஆழமானமலைச்சுனைவரைக்கும் மலையேறுகிறதும் யிறங்கிறதுமாய் படிகள்கட்டியிருக்குது. யிந்த ஆழமானமலைச்சுனையில் வொருவொடைபிறவாகிக்குது. யிவடத்தில் யிளைப்புதீத்துக்கொண்டு அப்பால்யெழுவனைவாயிருக்கிற ரெண்டாயிரம்படிகள்பரியந்தம் அதிகவுசரமானமலையேறவேணும். யேறும்போதும் யிறங்கும்போதும் வழக்கமில்லாதவர்கள் சுத்திலும் பார்த்தால்கண்கள்சுழலும். யிந்தபடிகள்செவையாய்கட்டியிருக்குது. சுத்திலும்மலைகள்மயம். அப்பால் கல்பாறுள்ளசமபூமியாய் ஸ்ரீசைலபரியந்தமும் யிருக்குது யிந்தமலை யேறியிறங்கிறத்துக்கு திருப்பதிபோயிகள்போலிக்குஆறுபேரானால் சுளுவாய்மலையேறுவார்கள். திருப்பதி காலிகோபுரம் வரைக்கும யேறியிறங்கிற பிறயாசை யிவடத்திலேயெங்குமில்லை . வுப்பாடாபோயிகள் யெட்டுபேரும் யெனடோலியைசுளுவாகவே சுமந்தார்கள். ஆனால் நாகலோட்டிதாண்டினவுடனே மலையேறுகிறதுபிறயாசமாகையால் பிறதமத்தில் யிவ்வளவுபிறயாசையிருக்குமெ யினியெப்படியிருக்குமோயென்கிற அதயிரியம மனுஷாளுக்குத்தோணுது அப்பால்போகப்போக மிகவும்வருத்தம் தோணுகிறதில்லை. மலையேறியிறங்கிறத்தில் ஆதம்கூர்போயிகளுக்கு வுப்பாடாபோயிகள்யீன்வாங்கயில்லை. ஆதமகூர்போயிகளுக்குவருஷத்துக்கு வொருதரம்வலை அகப்படுகிறத்தால் திருப்பதிபோயிகளைப்போலே நாள்தோறும் மலையேறிவழக்கப்பட்டவர்களல்லா. நானசெய்விச்சடோலி ரெண்டேமுக்காலடி அகலமாகிலும ஸ்ரீசைலத்துக்கு சாதாரணமாய்போச்சுது. கந்தனூர் நவாபு முதலானவர்கள் பல்லக்கின்மேரிலேதானே ஸ்ரீசைலம வந்திருக்கிறார்கள் பிறபுக்களாகையால் கிளைகளைவெட்டுகிறத்துக்குமுனனே மனுஷியாளைஅனுப்பியிருப்பார்கள். ஸ்ரீசைலத்திலே பூர்வத்தில் ஆலயத்தைச்சுத்திலும பெரியபட்டணமயிருந்தது அதிலேசாலிகள் முனனூத்தறுவனூவீட்டுக்காறர்கள் யிருந்தார்களாம அந்த பட்டணமெல்லாமயிப்போ பழாய்ப்போயிருக்குது அந்தவீடுகளைச்சேர்ந்தகிணறுகளும செவிர்களும யிப்போதெரிஞ்சுகொண்டிருக்குது அய்யாயிரமவருஷத்துக்குமுனனே அனனமாரெட்டியென்பவருக்கு பொன்மொச்சைகொட்டை விளைஞ்சுதாம் அவர் அந்தபொனனைக்கொண்டு சுவாமிக்குமுன்மண்டபத்தினமேலிருக்கிற நந்திகளுக்கும பிறங்கிகளுக்கும விமானத்துக்கும துசலதமபத்துக்கும தங்கமுலாமசெய்துதாமபிரத்தகடு அடிச்சாராம். அதுயிப்போமிகவும் கிலப்பட்டிருக்குது ஆலயத்துக்கு ரெண்டுபிறாகாரங்கள்யிருக்குது முதல்பிறாகாரத்தின் மதிளின்மேரில் நாலுபக்கமும் சிவலீலைப்பிறதிமைகளை சிற்பி வெகு அழகாய் செய்திருக்கிறான் ஆனால் கல்லுகளை செவையாயிசைக்கயில்லை. மதிளின்மேரில் திருவாட்சிவளைவுகள்செய்து வளைவுவொண்ணுக்குவொவ்வொருபதுமைசெய்திருக்குது ரெண்டாவதுமதிளும்மன்

டபங்களும் முழுதும் இடிமாய்ப்போச்சுது நாள்தோறும் அர்ச்சகாள் சமமதியானபோது சுவாமிக்கு ஆராதனை செய்கிறார்கள் நியமமில்லை யாத்திரைக்கு வரப்பட்டவர்களெல்லாரும் சொயிச்சையாகவே லிங்கத்தைத் தொட்டு அபிஷேக நிவேதனங்கள் செய்கிறார்கள். ஆலயத்திலே லிங்கம பீடத்துக்கு மேல் சாண்வுசரமாயிருக்குது விமானத்துக்கு அஞ்சுசிகரம நாலுசிகரம இடிமாய்ப்போச்சுது நடுவேயிருக்கிற பெரியசிகரமாத்திரம தெரிசனத்துக்கு யோக்கியமாயிருக்குது யிந்தவழியாய் வந்தால் ஆலயத்தில் பிறவேசிக்கிறவரைக்கும் சிகர தெரிசனமாகிறதில்லை நெல்லூர்வழியாய் வந்தால் ஆலயத்துக்கு மூணுகோசுதூரத்துக்கு முன்னே சிகரேசுவரமென்கிற ஊரிலே சிகரதெரிசனமாகுது. சிவராத்திரி முதல் சித்திரைமாசம்வரைக்கும் ஸ்ரீசைலத்திலே நாள்தோறும் பல்லக்குவுச்சவம் நடக்குது. சிவராத்திரிவுச்சவகாலத்திலே நாளொண்ணுக்கு யெழுரூபாயும் குதிரைக்கு அஞ்சுரூபாயும் அபிஷேகத்துக்கு மூணுரூபாயும் வாகனவுச்சவம் செய்விச்சால் வுச்சவசெலவுபோக மூணுவராகனும் கண்ணுடி சேர்வையென்கிற வுச்சவத்துக்கு மூணுரூபாயும் கந்தனூர்நவாபுமனுஷியாள் வாங்கிறார்கள் சித்திரைமாசத்தில் பிரமராம்பிகைதேவிக்கு தாமசவுச்சவம் செய்தானபின்பு ஸ்ரீசைலத்திலே வந்திருக்கிற செனங்கள் ஒருவரும் யிருக்கிறதில்லை ஒருத்தர் ரெண்டுபேர் அர்ச்சகாள் மாத்திரம் மாறிமாறி ஆதம்கூறிலிருந்து வந்திருக்கிறார்கள் நாள்ப்படயிருந்தால் மலைமேலிருக்கிற செலத்தால் சுரம் கோதரம் சோகை யிதுமுதலான நோவுகள் காணுது. பிரமராம்பிகைதேவிக்குமாத்திரம் மிராசு அர்ச்சகாள் தர்பில ஒருகுமலதா நிமமாய் ஆலயத்திலே குடியிருந்துக்கொண்டு ஆராதனை செய்கிறான். அப்படி மலைமேல்வாசம்பண்ணுகிற குமலதா ஒருவருஷிகாலம் பிராணனுடனேயிருக்கிறது அரிது அது யிவிடத்தில் வுண்டாகிற ரோகத்தைப்பத்தியோ அல்லது பத்தி தாழ்விலேயோ தெரியவில்லை. இப்போ அஞ்சுவருஷமாய் ராமேசுவரபட்டு யென்கிறவர் அன்பதுவயசான யோகாங்கிப்பிராமணன் ஆச்சரியமாய் வெகுநாளாய் ஆலயத்திலே வசிச்சுக்கொண்டு தேவிஆராதனம்பண்ணிக்கொண்டிருக்கிறார். ஆலயத்தில் வாசம்செய்கிற வேடர்கள் ஆதம்கூறில் வசிக்கிறவாளைப்போலே மிகவும் கொழுத்தவர்கள். தேவிஆலயத்துக்கும் சுவாமிஆலயத்துக்கும் சமீபத்தில் சின்னமேட்டின்பேரிலே வேடர்கள் குடிசை போட்டுக்கொண்டிருக்கிறார்கள் ஆலயத்தைச்சுத்திலும் யிருவத்தஞ்சு வேடர்குடிசையிருக்குது. யிந்த வேடரும் புரட்டாசிமாசத்தில் வலைசேபோகிறார்கள். அப்போ மழையின் யீகளுடைய வுபத்திரவம் வுண்டாகுது. அது சகிக்கத்தக்கதல்ல. ஆலயத்தினிடத்தில் கோவில்மாடுகள் நூறுகால் நடையிருக்குது. கடப்பைவிட்டபிற்பாடியிவிடத்திலேதான் பசுவின்பால் தயிர் காணலாச்சுது. யிந்ததேசத்தார் பசுக்களை வெகுசாக்கிறதையாய்ப்போஷிச்சு வுழவுக்கு நெல்லூர்சீமையெருதுகளை - தடவைக்குமாடு ஒண்ணுக்கு பத்துவராகன் குடுத்துவாங்கிக்கொண்டுவருகிறார்கள். யெருமைகள் கறவலுக்கே தவிர யிந்த பூமிக்கு அதினுடைய கடாக்கள் வுழவுக்கு வுதவுகிறதில்லை. பிரமராம்பிகை தேவிபிம்பம் சின்னதாய் சுந்தரமாய் வுல்க்கார்ந்த அவசரமாயிருக்குது. கெர்ப்பக்கிரகவாசல்ப்படியின்மேல் ஸ்ரீசக்கிரம்ஸ்தாபிச்சிருக்குது. ஆலயத்தில் பதினொருதீர்த்தம் யிருக்குது. அதுகளில் மலையூத்துசுரந்து அந்தரவாகினியாய் வந்து அப்புறம்போகுது. யிந்ததீர்த்தங்களுக்கும் வெய்யல்படாமல்யிருக்கும்பொருட்டு மேலே மண்டபங்கள் கட்டியிருக்குது. யெந்ததீர்த்தமும் முழங்கால் ஆழத்துக்கு அதிகமில்லை. யிந்ததீர்த்தங்கள் ரோககாரியென்று சொல்லுகிறார்கள். ஆனால் யிதுகளுடைய ஜெலம் பரிசுத்தமாயும் சீதளமாயும் யிருக்குது. ஆலயவுச்சவங்களில் வாங்கப்பட்ட தீர்வைமூலமாய் வருஷித்துக்கு பதினெண்ணாயிரம் ரூபாய் கந்தனூர்நவாபுக்கு வந்தும் ஆலயம் யென்னகெதியடைஞ்சாலும் விசாரிக்கிறதில்லை. யாராவது ஆலயம்பழுதுபார்த்தால் யெவ்வளவு செலவுபண்ணி பழுதுபார்க்கிறார்களோ அவ்வளவு பணம் தீர்வையாய் நவாபு வாங்கிறார். ராசாசெந்துலாலா யிந்த திற்பந்தத்திலே சில திருப்பணிகள் பழுதுபார்த்து பூ

ரூவாய்முடிக்காமல் மகஜருதாயப்பட்டு விட்டுவிட்டார். அவர்ஆறுபேர் பிறும்மணாளை மாசத்துக்கு ஆறுரூபாய்ச்சம்பளம்செய்து நாள்தோறும்ஸ்ரீசைலநாதருக்கு அபிஷேகம்செய்விக்கிறார்.மயிஷாசுரமர்த்தனம் மைசூர்தேசத்திலேயானதால் அதுக்கு மைசூரென்று பேராச்சுதாம்.அங்கேமயிஷாசுரனைமர்த்தனம்பண்ணியிர்பாடு.பிறமறாம்பிகைஸ்ரீசைலத்தில்பிறவேசமானாளாம் ஆகையால்.அந்தமைசூர்சீமையிந்ததேவிபிறந்ததேசமென்று-மைசூர்தேசத்தார்யார்ஸ்ரீசைலத்துக்குவந்தபோதிலும் தீர்வை பணம் நவாபுசர்க்காருக்கு குடுக்கிறதில்லை.ஜங்கமசாதியாருக்கும்ஆருத்தியாளுக்கும் பிறும்மணாளுக்கும்வுச்சவகாலத்தில் தீர்வைப்பணம்வாங்கிறதில்லை.ஆலயத்திலயெங்கெடார்த்தாலும் நெரிஞ்சல்முள்ளுமயமாயிருக்குது. சர்பங்களும்விசேஷமாய்வுண்டு. புலிகளும்அப்போதைக்கப்போ வந்து சஞ்சரிச்சுக்கொண்டேயிருக்குது.அதுகளை நீக்கிவிமரிசைசெய்யதிக்கில்லை.சுவாமிக்கும் அம்மனுக்கும் வஸ்திராபரணங்கள்யாராவது சமர்பிச்சால்அதின்மதிப்புக்குசரியானபணம் நவாபு தீர்வைவாங்கிக்கொள்ளுகிறதுமல்லாமல்சிலநாள் பொறுத்துசமர்பிச்ச வஸ்திராபரணங்களை அபகரிக்கிறார் யிந்தஸ்தலவர்த்தமானம்தெரிஞ்சவர்கள் (அகோபாக்கியவதிபாரியாபாண்டரூலம்நயாசிதே) யென்கிற சுலோகத்தைப்போல்.திருப்பதிதேவஸ்தானத்திலே தீர்வைவசூல்பண்ணுகிற விஷயத்திலும்பினியானைக்கொண்டாடவேணும்.யிப்படி நடக்கும் அனியாயங்களை குறிச்சுயோசிச்சால். நடக்கிறகாலம்கலிகாலம்பிறுச்சியமாகையால் லோகசாட்சிகத்மசாட்சியாயிருக்கிற யீசுவரன்வுலகத்தாருடையகர்மத்துக்குத்தகுந்தபலன்குடுப்பதை தவிர அதிகமாகயிப்போயென்னசெய்வாரென்று தோணுது.யிந்த ஸ்ரீசைலம்சாஸ்திரப்பிறசித்தமானஸ்தலம்.சிகர தெரிசனத்தினாலேயே ஜென்மாந்திரங்கள் யில்லையென்றுபுராணங்கள்முறையிடுது.

௰௭௳ பகல்மூணுமணிக்குப்புறப்பட்டு.௬ மணிக்குபெத்தசெருவைச்சேர்ந்தேன்.

௰௮௳ காலமே.௬ .மணிக்குபுறப்பட்டு.௯.மணிக்குதாகலோட்டியைச்சேர்ந்தேன்.

பகல்மூணுமணிக்குபுறப்பட்டு-௬.மணிக்குமழுப்படியும்ஆத்மகூரைச்சேர்ந்தேன்.

௰௯௳. பகல்.௩. மணிக்குப்புறப்பட்டு. ௪.மணிக்கு.யிதுக்கு ஒருகோசதூரமுள்ள - நந்திகுண்டையென்கிறவூரைச்சேர்ந்தேன்.நல்லவழி. ஆறல்-முள்ளுமயம். யிதுபெரியவூர். வொன்றுதேவாலயமும் பிறுமணாள்வீடுகளும் கோமட்டிவீடுகளும்யிருக்குது.சகலவஸ்துக்களும்அகப்படும்.

௨௰௳.காலமே ௬-மணிக்குபுறப்பட்டு.௰௨-மணிக்கு.யிதுக்கு.௮.கோசதூரமுள்ள நிவர்திசங்கம்யென்கிறபுண்ணியஸ்தலம்சேர்ந்தேன்.நடந்தவழி யப்போதும் சவுகரியமாயிருக்கப்பட்டது. சின்னபருக்காங்கல்பூமி· காடியில்லை.அடுத்தடுத்துவூர்களும் அதுகளில்கிலமான கோட்டைகளும் யிருக்குது.யிவடத்தியதேவாலயங்களிலேயிருக்கிறஅர்ச்சகாள் தம்பளசாதி. ஆலயத்திலே யெல்லாரும்லிங்கங்களைத்தொட்டுபூசைச்செய்யலாம். நந்திகுண்டைக்கும் நிவறதிசங்கத்துக்கும்.நடுவே காதவழியில்முசலிமடுகுயென்றுவொருவூர்யிருக்குது.அதுபேட்டைஸ்தலம்.யிறங்க நல்லவசதி யுள்ளதல்ல. திருப்பதிமுதல் நிவறதிசங்கம்வரைக்கும்யிருக்கிறவூர்கள்தோறும். வொருகொட்டியம். வொருகணக்கனும்பெரியதனக்காறருயிருக்கிறார்கள். கணக்கரிலசிலபேர். நந்தவரீகப்பிறும்மணாளும். சிலபேர் பிறதமசாகைப்பிறும்மணாளும். சிலபேர் நியோகிப்பிறும்மணாளும். ஆகமூணுவகையாய் கணக்குத்தொழில்செய்கிறார்கள். கிறாமங்களில் சேவிக்கிறசேவகர்சம்பளத்துக்குயீடாகமானியங்களை அனுபவி

ச்சுக்கொண்டு. காவல்முதலான கிராமவேலைகள் செய்கிறார்கள். கன்னியமான பாட்டைசாரிகள் பெரிய தனக்காறரை நயபயத்தினாலே வசப்படுத்திக்கொண்டு அவர்கள் சகாயத்தினாலே வேண்டியசாமான்களை சம்பாதிக்கவேணும். கொஞ்சம் சற்காறர் அதிகாரஸ்தாளுடைய சகாயமிருந்தால் முசாபர்களுக்கு யிந்தேசத்தில் நன்மையாய்க்காணுது. யிருந்த சாத்மீகத்தினாலே யிவிடத்தில் காரியங்கள் நடக்கிறதில்லை. வழிகாட்டவும் யிறங்கியிருக்கிற யிடத்திலே வேண்டிய வஸ்துக்கள் அழைப்பிச்சுக்கொடுக்கவும் பெரிய தனக்காறர்களுத்திரவின்படி சேவகர் நடக்கிறார்கள். திருப்பதிமுதல் மிகவும் பழஅரிசியென்று கடைக்காறர் கொடுக்கிறதும் அந்த சமைச்சால் புது அரிசிபோலே வெளிப்பட்டுப்போகுது. வழக்கப்படுகிறவாளுக்கும் யிந்த அரிசி அன்னம் சாப்பிடுகிறது பிரயாசையாயிருக்கும். புழுங்கலரிசி யெவ்வளவும் அகப்படாது. யிங்கிலியவர்கள் சோளம் வரகரிசி யிதுகளினாலே காலம் கழிக்கிறார்கள். கடப்பைமுதல் நிவறுதிசங்கம்வரைக்கும் ஆனிமுதல் ஆவணிமாசம்வரைக்கும் கிரமமான மழைகாலம். யிந்த மூணுமாசமும் நாள்தோறும் மழையும் மப்புமாயிருக்குது. மலையடிகிராமங்களில் காத்து அடிக்கும்போது மலைமேல் மோதி வெகு சப்தத்துடனே மழைபெய்குது. புதுசாய் வருகிறவர்களுக்கு யிந்த காத்தை சகிப்பது வெகுபிரயாசை. நிவறுதிசங்கம் கிருஷ்ணாநதிதீரம் கிருஷ்ணை துங்கபத்திரையுடனே அஞ்சு நதிகள் யிதுக்குமுன்னே சில தூரத்தில் கலந்துவிடத்தில் பாவநாசனியென்கிற நதியுடனே கூடி அதிகமாய்ப் பிரவாகிச்சுக்கொண்டு வடக்குநோக்கிப்போகுது. யிந்த ஊர் வாசயோக்கியமானயிடம். நதியின் கரையில் தர்மராசா பிறதிஷ்டையென்று ஒரு சிவ ஸ்தலமிருக்குது. பிறகஸ்பதிபகவான் கன்னியாராசியில் வரும்போது அனேக செனங்கள் ஸ்தானம் செய்து கிருஷ்ணைபுஷ்கரணியாத்திரை யிவடத்துக்கு வந்து செய்கிறார்கள். சகலபாவங்களையும் நிவர்த்திசெய்கிறயிடமாகையால் யிதுக்கு நிவர்த்திசங்கமென்று பேராச்சுது. யிந்த ஊர் கந்தனூர் நவாபுது. பிலைபடி வாரம். வேண்டியசாமான்கள் பிரியமாய் அகப்படும். யிருமத்திரும் மனுஷர் குடியிருக்குது. நதிக்கு யிக்கரைவரைக்கும் கந்தனூர் நவாபுராச்சியம். அக்கரைமுதல் அயிதராபாதுடனே சேர்ந்தது. நதிதாண்டுகிறதுக்கு ரெண்டு கோசாயிலும் யிவ்வளவென்று தீர்வை குடுக்கவேணும். நான் ஸ்ரீசயிலத்துக்கு போகும்போது குத்திரசெனம் ஒண்ணுக்கு அரணாரூபாயும். குதிரை ஒண்ணுக்கு முக்காரூபாயும் அபிஷேகத்துக்கு ஒண்ணரைரூபாயும் பிராமணசெனம் ஒண்ணுக்கு ரெண்டணாவும் குடுத்தேன். பல்லாரிஜில்லாவில் முன்சிரஸ்தாவாயிருந்த ராமசந்திரரூபர் யிவடத்துக்கு யாத்திரை வந்தபோது யிந்த ஊரார் நவாபுக்கு கட்டிக்கொண்டிருந்த வரிப்பணத்தை மன்னிச்சு சர்வமானியமாய் அனுபவிக்கும்படி வாக்குசகாயம் செய்தார். ஆகையால் யிந்த பிராமணர் தாங்கள் செய்கிற தல்லகர்ம பலன்களெல்லாம் அவருதேயென்று கொண்டாடுகிறார்கள். ௨௰௪ ௳ ௨ மணிவரைக்கும் யிந்த நதிக்கரையில் தீர்த்தவிதி பிதுருகருமங்கள் செய்தேன்.

௨௰௪ ௳ பகலொருமணிக்கு புறப்பட்டு ௯ மணிக்கு யிதுக்கு ௪ கோசதூரமுள்ள பெண்டவல்லி யென்கிற ஊர் சித்தேசுவர காட்டுவழியாய் சேர்ந்தேன். நிவர்த்திசங்கத்துக்கு ஒரு கோசதூரமான சித்தேசுவர காடுவரைக்கும் மலையின்பேரில் யேறிநடந்து மலையைச்சுத்திப்போகவேணும். வழிகல்லாறு. யேறியிறங்கவேணும். யிவிடத்தில் கிருஷ்ணாநதியைத்தாண்டுகிறதுக்கு கந்தனூராருது. புட்டியென்கிற ஒரு பரசையிருக்குது. நாலுபேர் போயிசாதிமனுஷியாள் துடுப்புகளால் தள்ளிநடத்துகிறார்கள். பரசாவது பெரிய மூங்கில்கூடை சுத்திலும் தோலினாலே கவசந்தச்சியிருக்குது. நாற்பதுபேர் வுள்க்காரலாம். கொஞ்சம் தள்ளிவிழுந்தால் முழுகிப்போம். ஒருபல்லக்கையும் பனிரண்டு போயிகளையும் ஒரு பரசை கொண்டுபோய் அக்கரையில் விட்டுமறுபடி வருகிறதுக்கு பதினஞ்சு நிமிஷம் பிடிக்குது. நதிக்கு ரெண்டுபக்கமும் துறைதேவுகளில் மலைகளிருக்கிறபடியால் அதிக காத்து தீர்ந்ததில்லாமல் மதத்து அலைகளைப்பார்க்கிலும் யிது தாண்டுகிறதுக்கு க்ஷேமமாயிருக்குது. நாலுமணிக்கு

யென்சாமானுடனே அக்கரையைசேர்ந்தேன் தீர்வைப்பணம் சவாரிக்கு அஞ்சுரூபாய் குதிரைக்கு ஒன்ணேகால்ரூபாய்குத்திரசெனம்வொன்றுக்குவொருஅணாயிந்த பிறகாரம் ரெண்டுகரையிலும்யிக்கரைக்குகந்தவூர்நவாபுக்கும்அக்கரைக்குதிசாம்மனுஷியாளுக்கும் சேருகிறது நாலேகால் மணிக்குபுறப்பட்டேன் அப்பால்ரெண்டுகோசுதூரமவரைக்கும் மலைநடுயிலவழியாகுது கல்டாருபூமி கடினமானகணவாய்தாண்டவேணும் அப்பால்வொருகோசுதூரமுள்ளவொருகோசுதூரம்வெளியானபூமி நல்லவழி பெண்டவல்லியில்மிகவும்விசாலமும்சுந்தரமானரெங்கமட்டசுவரசுவாமி கோவில்யிருக்குது பாட்டைசாரிகள்யிறங்கிறத்துக்குவீடுசவுப்பார்க்கிலும்சோலிவசதியாயிருக்குது நல்லபஸ்தியான ஊர்கோட்டையும்நாற்பது சோமுட்டிவீடுகளும்யிருக்குது சகலவஸ்துகளும் அகப்படும். யிந்தவூர்அயிதராபாதுநவாடக்குள்ளாயிருக்கிறது கோகசமீன்தாறர்களில் கொல்லாபுரம் சமீன்தாறனைச்சேர்ந்தது. சமீன்தாறர்கள் தங்களுக்குநவாபுயேற்படுத்தியிருக்கிறபணத்தைகட்டிப்போட்டிருச்சியதந்திரங்களைசங்கள் சமீன்களில யிஷ்டப்படி நடத்துகிறார்கள் கண்டுசிப்பந்தி அதிகமாய் வைச்சுக்கொண்டிருக்கிற சிலசமீன்தாறர்கள்கட்டவேண்டிய கிஸ்திபணம்கட்டாமல் தடங்கல்செய்கிறார்கள். அப்போநவாபுதண்டெடுத்துஅவனைசெயிச்சுபணத்தைவாங்கிக்கொள்ளவேணும். சமீன்தாறர்களுக்கு வொருவருக்கொருவர் விரோதம்நேரிட்டால் யுத்தம்பண்ணிவொருவரைவொருவர்செயிக்காமல் வொருவர்ஊரைவொருவர்கொள்ளையிட்டுகுடிகளையிம்சிச்சுராச்சியத்தைபாழாக்குகிறார்கள் அப்போ தியாயத்தைவிசாரிச்சு சமாதானம்செய்யாமல்நவாபுதிவான்பேஷ்காருசெந்துலாலாமுதலானவர்கள்திறவ்விய ஆசையால்பின்னும்கலகத்தைஅதிகமாக்கிவேடிக்கைபார்க்கிறார்கள அப்பேர்ப்பட்டகலகம் வநபர்திசமீன்தாறனுக்கும் கொல்லாபுரம் சமீன்தாறனுக்கும்வொருவருஷமாய்நேரிட்டுயிப்போகலகம் அதிகப்பட்டுயிருக்குது. அயிதறுபாதுநவாபுதண்டுசொந்தமும் வொருகோட்டையும்யிருக்குது. ஜில்லாதாறனை நேசம்செய்துகொண்டு சிலசேவுகர்யென்னுடனேவரும்படிபண்ணிக்கொண்டேன்யிவிடத்திலேயிருந்துஅயிதறுபாதுக்குபோகிறத்துக்கு அனேகம்வழியுண்டென்றுமஅதில் கொத்தகோட்டவழியைமுக்கியமாயும்யெல்லாரும்சொல்லுகிறார்கள் அது சுத்துவழியென்றும் வெகுபிறயாசையென்றும்தெரிஞ்சுது.

உ௴ ருவை உதயத்துக்குமுன் ௫ மணிக்குபுறப்பட்டு ௰௨ மணிக்குயிதுக்கு ௮ கோசுதூரமுள்ள பானகல்லு யென்கிறபெரியதுர்கமுள்ளகிறமத்தைச்சேர்ந்தேன் வழிவிசாலம் மணல்பாங்கு பெண்டவல்லிக்கு மூணுகோசு தூரத்தில் துமபகுண்டயென்கிறவூர்யிருக்குது அதுமுதல்கும்பினியார் அயிதறாபாதுக்குதண்டுபாட்டையேற்படுத்தியிருக்கிறார்கள் காட்டுவழியாகிலும் நடக்க தாராளமாயிருக்குது பக்கங்களில்சின்னமலைகள்யிருக்குது. துமபகுண்டவரைக்கும ஸ்ரீசைலயாத்திரைக்காக தண்டுபாட்டையைவிட்டுகுறுக்குவழியாய்வந்தேன் பானகல்மலையடிவாரமமலைமேல் விசாலமான துர்கமும கோட்டையும்யிருக்குது ஆனால் பஸ்தியானதல்லா யிது யிங்கிலிஷ் தண்டுகளுக்கு வாலாயம வேண்டிய சாமானுகளை வரவழைச்சுப்போடுகிறவூராகையால்பாட்டைசாரிகளுக்கு வேண்டிய வஸ்துக்கள் அகப்படும வீடுகள்சிறுசுசாவடிகள் யிருக்குது யிந்தவூர்பிறமாணர்மிகுந்த வுபசாரிகாரிகளல்லா யிதுவும யித்துடனேசேர்ந்தசிலவூர்களும மேடூருதாசெருகவுக்கு சாகீராய் அயிதறுபாது நவாபுவிட்டிருக்கிறார்.

உ௴ கூவை உதயத்துக்கு ௫ மணிக்குபுறப்பட்டு ௰௨ மணிக்குயிதுக்கு கூ கோசுதூரமுள்ள சின்னமந்திரியென்கிறவூரைச்சேர்ந்தேன். மந்திரியில்மூணுகோசுதூரத்தில்வநபர்தியென்கிறவூர்யிருக்குது நல்லவழி. ரெண்டுபக்கமுமகாடு சிறு மணல்பாங்கு யிதுகபயமில்லை வநபர்தியூர்வரைக்கும மலை

[illegible] இல்லை. வானப்பிரஸ்தாசிரமத்தை [illegible] கைப்பிடித்த [illegible] கடக்கிறேன். [illegible] [illegible] அருகில் [illegible] [illegible] போகிறார்களாக [illegible] [illegible] வேண்டியிருக்கிறது. [illegible] தேசத்தில் இந்த பக்கம் ஊர்களிலேயும் காட்டைகளும் அதில் [illegible] இல்லாததனாலும் இருக்கிறபடியால் சேர்க்கிறவர்களுக்கு [illegible] குடிகள் [illegible] தலைவர்களுக்கு [illegible] அவர்கள் பிராணனை [illegible] போதும் காவல் [illegible] செய்கிறார்கள். சென்னபட்டணம் [illegible] பஞ்சாங்கத்தில் [illegible] எழுதியிருக்கிறபடி ஊர்களுடைய பேர்களை கேட்டால் அப்பேர்ப்பட்ட பேர் உள்ள ஊர்கள் இங்கே இல்லையென்று சொல்லுகிறார்கள். இவ்விடங்களில் ஒரு மைலுக்கு ஒரு மைலிலிருக்கிற தூரங்களை வித்தியாசமாய் பஞ்சாங்கத்தில் கண்டிருக்குது. இன்னமும் [illegible] போகிறமேல் மார்க்கம் [illegible] இருக்கிறபடியால் [illegible] சரியாயிருக்குது [illegible] போகாது.

பகல். உ-மணிக்குப் புறப்பட்டு ௬-மணிக்கு [illegible] ௯. கோசதூரமுள்ள [illegible] சேர்ந்தேன். வழியில் சோளபுரம் [illegible] பேட்டை என்று இரண்டு ஊர்களிருக்குது. [illegible] பேட்டை வரையில் வழி சீராகம். [illegible] தெருக்களாக [illegible] இருக்குது. பருக்கைக்கல் மணல் நடக்கிறதுக்கு [illegible] பேட்டை [illegible] ஊர் [illegible] சமீபத்தில் தோப்புகளும் இருக்குது. [illegible] [illegible] ஒரு [illegible] இருக்குது. [illegible] மானதாயிருக்குது. [illegible] பிரசித்தமான [illegible] இருக்குது. மாதிரிப்பேட்டை முதல் வழி [illegible] பருக்கைக்கல் மணல் [illegible] [illegible] பந்தோபஸ்தான கோட்டையும் இருக்குது. ஊரில் [illegible] இருக்குது [illegible] அகப்படும். [illegible] இல்லை இன்றைக்கு [illegible] இருந்து போகவேணும்.

௨௰௯ உதயத்துக்கு முன் -௫ -மணிக்குப் புறப்பட்டு -௰௨- மணிக்கு [illegible] கோசதூரமுள்ள [illegible] சேர்ந்தேன். வழி மலையாயிருக்குது. வழியில் [illegible] ஊர்களிருக்குது. [illegible] [illegible] வழியிலிருக்குது. [illegible] [illegible] இருக்குது. [illegible] [illegible] பொருந்தாமலும் [illegible] [illegible] சொல்லமுடியாதாகையால் [illegible] இருக்குது. [illegible] மலைகளைப் பார்த்தால் பூமியை [illegible] மலைகளாய் [illegible] போகிறதோணுது. இந்த மலைகளுடைய [illegible] பூமியை [illegible] தோணுது. பரமாத்துமாவினுடைய லீலைகளான இந்த விசித்திரங்களையும் [illegible] ஆச்சரியப்படத்தக்கதா [illegible]

இருதுமல்லாமல் யீசுவர பத்தியையும் அடையாது சடசுகத்தையடைகிறது களக்கிருமமென்ற யோக்கியமான [illegible] இருக்கிறார்கள் [illegible] இருக்குது [illegible] அதிகாரத்தை [illegible] சகலசாமான்களும் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] அவருக்கு [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] சொல்லுகிறார்கள் [illegible] [illegible].

உதயத்துக்கு முன் [illegible] மணிக்கு [illegible] கோசதூரமுள்ள [illegible] வந்து சேர்ந்தேன். வழி [illegible]. [illegible] [illegible] இந்தவூர் [illegible] [illegible] [illegible] [illegible] இருக்குது [illegible] [illegible] [illegible]. மருமகனுக்கு சாகிர் நடக்குது. [illegible] இருக்கிறார்கள் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] அதுக [illegible] இருக்கிறார்.

பகல் [illegible] மணிக்கு புறப்பட்டு [illegible] மணிக்கு [illegible] கோசதூரமுள்ள [illegible] சேர்ந்தேன். வழி குதிரை பண்டிகள் போகும்படியாயிருக்குது. [illegible] சமீபத்தில் [illegible] பள்ளத்தில் இறங்கி மேலே யேறவேணும். [illegible] கொஞ்சம் [illegible] இந்தவூர் [illegible] [illegible] இருக்கிறது. அதுதவிர யிறங்குகிறதுக்கு யிடம் கிடையாது. [illegible] இல்லை. நல்ல ஜலம் தூரத்திலே யிருந்து அழைப்பிக்கவேணும். [illegible] சமீபத்தில் [illegible] இருக்குது. கடப்பைவிட்டபின்பு கறிகாய்கள் பிறயத்தினம் யில்லாமல் [illegible] [illegible] சஞ்சாரத்தினாலே [illegible] வருகிறபடியல்லாமல் [illegible] அகப்பட்டால் அபுறூபமாக [illegible] வருகிறபடியாயும் பிரியமாயும் இருக்குது. அநேக [illegible] [illegible] சென்மாந்திர [illegible] [illegible] காரணமாயிருக்கலாம்.

உதயத்துக்கு முன் [illegible] மணிக்கு புறப்பட்டு [illegible] மணிக்கு [illegible] கோசதூரமுள்ள [illegible] சேர்ந்தேன் வழியில் பாலமாகுலம் [illegible] செலவு [illegible] பூர்வமாக்கும் நல்ல வழி. [illegible] [illegible] பின்பு [illegible] இல்லை. சாதாரணமான [illegible] [illegible] இருக்குது. கிராமத்தில் வேண்டிய வஸ்துக்கள் அகப்படும். யிறங்குகிறதுக்கு [illegible] முதல் யிறங்குகிறதுக்கு [illegible] இருந்தால் சவுக்கியமேயல்லாது [illegible] யிடம் [illegible] விசாலமான [illegible] இல்லை. [illegible] வேணுமானால் [illegible] வேணும். அதுக்குத் தகுந்த தாதி [illegible] இல்லாவிட்டால் வுலகத்தார் சந்துஷ்டியடையமாட்டார்கள். வழியில் விஷயபோகங்கள் அதி

கமாய் அபேட்சிச்சால் வெகுவிசனத்துக்கு யிடம் வுண்டாகும். [illegible]
சவாரி பண்ணிக்கொண்டு வரப்பட்டவர்களா பல்லக்குகளும் [illegible]
பின்னும் [illegible] முனிகள் அடிச்சபி [illegible]
கள் அடிச்ச [illegible] வாரம் [illegible]
[illegible] போது யிந்த முனிகள் அடிச்ச யிடங்க [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] கிடபோயிகளைக் கொண்டு கவுறாதிரிச்ச அந்த கவுத்தினாலேயும் பல்லக்குக்கு மேல் சட்டத்தில் அஞ்சுகட்டும் அடிச்சட்டத்தில் அஞ்சுகட்டும் சுதறி லும்பலமாய்க் [illegible]
[illegible] சேர்த்து [illegible]
[illegible] சத்திலே நிவர் திசங்கமுதல் அபிதருபாதுவனாக்கும் [illegible] சென்பல்
[illegible] இவர்கள் அக்கிரபி [illegible] மெல்லிசுகவுறுகள் கூட கொண்டு வரவேணும். [illegible]
[illegible] நிருவாணம் [illegible] மந்திரம் மூ
[illegible] அந்த போயிகள் சுமக்கும்படியாய் [illegible]
[illegible] யெல்லாம் [illegible] யென்னுடைய அனுபவத்தில் [illegible] தேன். [illegible] சென்ங்
[illegible] குதிரையின் பேரிலும் [illegible] யிருப்பாய்
[illegible] நான் இருப்பதில் யிருவத்தாறு
ரூபாயில் [illegible] யென்னுடைய அனுபவம் [illegible]
[illegible] தேசம் சஞ்சரிக்கிறவள் நல்லவித்தியாய் [illegible]
[illegible] வேணும். [illegible] கரத்துக்கும் [illegible]
[illegible] கொண்டு வரவேணும். நான் கொண்டுபோன மருந்து [illegible]
[illegible] செங்களுக்கு கொடுத்ததில் அவர்களுக்கு [illegible]
[illegible] களிருந்தாலும் கூடவருகிறவாளுக்கு [illegible]
[illegible] பிரயாணங்களுக்கு உதவுவதற்கு [illegible]
[illegible] ருபாய் அரை ரூபாய் சென்னபட்டணத்தின் [illegible]
[illegible] சென்னபட்டணம் [illegible]
[illegible] மாறு [illegible] செல்லாது [illegible]
[illegible] சென்னபட்டணத்தி [illegible]
[illegible] கிருஷ்ட்டணா நதிக்கு முன்னமே செலவழிச்சிப்போட
வேணும்.

" [illegible] பெறப்பட்டு [illegible] அமணிக்கு [illegible] கோசு
தூரமுள்ள [illegible] பட்டணத்து [illegible] தென்புறத்தில் [illegible] கோசு தூரத்தில் [illegible]
[illegible] கோட்டையிருக்குது. [illegible]
வழி [illegible] நிரங்கி [illegible]
[illegible]
[illegible] யேரிகள் [illegible] யேரிகளின் [illegible]
மாந்தோப்புகளும் கதிகா [illegible] தோட்டங்களும் [illegible] கிருஷ்டணா [illegible] முதல் அபிதருபா [illegible]

[illegible]

ணது போகத்தக்கதாய் வொருவாராவதி வெகுபலமாய் கருங்கல்லினாலே கட்டியிருக்கிறார்கள் ஷகரைச்சுத்திலும் சின்ன மலைகள் வெகுசா யிருக்குது யிந்த குன்னுகளுடைய ஆதரவில் வெகுமசீதிகள் கட்டியிருக்குது யிவிடத்தில் யிந்து தேவாலயங்கள் யில்லை யிருந்தாலும் அது விருத்தியாகமாட்டாது ஷகருக்கு ரெண்டு கோசு தூரத்தில் யிங்கிலீஷ் தண்டியிருக்குது அந்த யிடத்தை சிக்கந்தருபாது வென்று சொல்லுகிறார்கள் ஷகருக்கும் அந்த தண்டுக்கும் நடுவில் வுசேன்சாகர்வென்று வொருபெரியயேரியிருக்குது அந்த யேரிகரைமேல் யிங்கிலீஷ்காறர் குதிரை பண்டிகள் போகும்படி செவையாய் வழியேற்படுத்தி முகலாய்சவாரிகளும் மனுஷியாளும் யேறிநடந்து அந்த வழியைக் கெடுக்காமல் ரெண்டு பக்கமும் பாருசிபாய்களை வைச்சிருக்கிறார்கள் சாதிக்காறர்தவிர மத்தவர்களை வுத்தரவுயில்லாமல் அந்தகரையின்மேல் நடக்க வொட்டார்கள் சாதிக்காறர் பீரங்கி யுடனே சாகசம் பண்ணுகிறத்தால் யிந்த தேசஸ்தாள் அவர்களை பிரங்கிவாறு வென்றுசொல்லுகிறார்கள் யிதை மாறுபாடாய் பறங்கிகளென்றுசொல்லப் படுகிறது குப்பினி தண்டு யிருக்கிற யிடம் அயிதருபாத்தைப்பார்க்கிலும் நாளுக்குநாள் அதிகமான பஸ்தியாய் வருது யிருவது வருஷத்துக்கு முன்னே நான் பார்த்த போது யிருந்ததைப் பார்க்கிலும் யிப்போ அந்தயிடம் வெகுஆச்சரியமான பஸ்தியாயிருக்குது ஷகரைப் போலே அனியாயம்யில்லாமல் யிங்கிலீஷ்தண்டில் கொத்தவால் சாவடிவைச்சு அதில் கம்மிசேரியாட்டு அசிஷ்டாண்டுமுகாந்திரமாய் நியாயவிசாரணைபண்ணுகிறபடியால் வர்த்தகர்முதலானசெனங்கள் யிந்த தண்டில் யிருக்க நாளுக்குநாள் சந்தோஷமுள்ளவர்களாயிருக்கிறார்கள் யிவிடத்தியமெத்தைவீடுகள் யெத்தனைஅந்தஸ்தாய்கட்டினாலும் ஸ்தம்பத்தின்மேல் கூரைகளுடைய பொறுப்பேத்திமண்செவிர்கள் வைச்சு அந்த செவிரின் மேல் நாணையமான சன்னகாரையை தங்கள் யிஷ்டப்படிக்கு சித்திரவிசித்திரமாய் பூசுகிறார்கள் யிவிடத்தியபூமி பருக்காண்

கல் கலந்த சிவந்த களிப் பாங்காய் வெகு அழுத்தமா யிருக்குது யிந்த ஷகருக்கு மூணுகோசு தூரத்தில் கோல கொண்டை யென்று வொரு துர்கமிருக்குது அங்கே பலமான கோட்டையிருக்குது அவிடத்தில் நிசாமுடைய அந்தப்புரஸ்திரீகள் யிருக்கிறார்கள் சமுஸ்தானத்தி னுடைய மூலதனம் யிருக்குது அவிடத்தில் விஸ்தாரம் வீடுகள் கட்டிக் கொண்டு செனங்கள் குடியிருக்கிறார்கள் ஷகருக்குசுத்திலும் யிருக்கிற பூமி மிகவும் ஸாரமானது யெந்த பயிர்களும் செடிகளும் வெகுவீரியமாய் பயிராகுது யெளியவர்கள் யெந்தசெடிகள் வைச்சாலும் அதுகளுடையபலன்களை ஆயுதமே ஆபரணமாயும் அகங்காரமே பெருமையாயும் யெண்ணியிருக்கப்பட்டவர்கள் அவாளை அதினுடையபலத்தை அனுபவிக்கவொட்டுகிறதில்லை பாக்கியவான்கள் வைக்கிறதோட்டங்கள் தோப்புகளுக்கு ருசிகத்தினாலே அடிக்கடி அவாளுக்கு விரோதங்கள் நேரிடுகிறபடி யால் அந்தசுகம் அனுபவிக்க அவாளுக்கு பிரீதி யில்லாமல் யிருக்குது ஆகையால் யாருக்கும் பயிரிடுகிற யிஷ்டமில்லை யிதுகளுக் கெல்லாம் சகிச்சுக் கொண்டு பயிரிடுகிற செடிகள் வெகுசேழிப்பா யிருக்குது சிறு ஆரஞ்சி பழம் யிவிடத்தில் விஸ்தாரம் வாழைப்பழம் தவிர மத்தசகல விதமான பழங்களும் நல்லதாய் யிவிடத்தில் அகப்படும் ஆனால்வெகு விலைஅதிகமாயிருக்குது சென்னபட்டணத்துவிலைக்கு மூணுபங்கு அதிகம் குடுக்கவேணும் கறிகாய்கள் பிரியமானாலும் வெகுருசிகரமாயிருக்குது ஷகரில் வஸ்திராபரணங்கள் சிபாய்களுக்குத்தகுந்தது விஸ்தாரம் அகப்படும் விலை வொசத்தியான ரத்தினங்கள் கொள்ளுகிற வுச்சாகமும் தயிரியமும் யிவிடத்தில் யாருக்கும் யில்லாத்தால் வர்த்தகர் அப்பேர்ப்பட்ட ரத்தனங்களை கொண்டுவருகிறதில்லை நகைகள்முதலான து விக்கிறவர்களுக்கு காவலுக்காக சேவுகர் யிருக்கவேணும் அதினாலே கன்னியமும் அவர்களுக்கு வுண்டாயிருக்குது நகைகள் ரத்தினங்கள் வேண்டிய கனவான்கள் வர்த்தகாள்வீட்டுக்குப்போயாவது வர்த்தகாளை அழைப்பிச்சாவது அவர்கள்சொன்னவிலைக்கு வாங்கிக்கொண்டு தங்கள்யிஷ்டமானபோது பணம் குடுக்கிறார்கள் சாத்துமீக குணோத்தமமுண்டான தேசங்களில்வாசம் பண்ணுகிற வாளுக்கு யிந்தஷகருடைய நடத்தையும் யிவிடத்திய சஞ்சாரமும் பயங்கரமாயிருக்கும் சென்னப்பட்டணம் வொருறூபாய்க்கு யிவிடத்துபைசா அண்டது அப்பேர்ப்பட்ட பைசாவொண்ணுக்கு புஞ்சிபலகறை யிருவது பஞ்சி வொண்ணுக்கு பலகறை நாலு யிவிடத்தில்பிச்சியென்றும் கோவிந்தபக்ஷியென்றும் ரெண்டுவிதமான றூபாய்சிலாமணியாகுது அதுகளை மாத்தும்போது வொரு பைசாரெண்டுபைசா வட்டம் குடுக்கவேணும் யெப்பேர்ப்பட்ட நல்லறூபாயானாலும் அதுக்கு வொருதோஷம்சொல்லுகிறார்கள் யிந்த றூபாய்களுக்கு யிவிடத்தியார் செய்கிற பரிக்ஷை ஆச்சரியமா யிருக்குது யிவிடத்திய றூபாய் வொண்ணுக்கு பைசாதாற்பது சென்னபட்டணம் றூபா யிருந்தால் அதுகளுக்கு விசேஷபரிக்ஷைகளும் வட்டம் குடுக்கவேண்டிய தொந்தரவும் யில்லை

ஆனால் சென்னப்பட்டணம் நவாபுகள் யிடத்தில் அகப்படாது பூர்வகாலத்தில் ஆஸப்ஜாயென்கிற வொருமகாபுருஷன் க்ஷாத்திறதர்மத்தினாலே டில்லி பாதுஷாவை சந்தோஷப்படுத்தி யிந்தராச்சியத்தை சாகீராய்வாங்கிக்கொண்டாராம் அவர்வம்சஸ்தாள் யிப்பவும்ராச்சியம் ஆளுகிறார்கள் சிலநாளைக்குமுன்னேபவுலர்சிங்கு யென்பவன் துனாத்தனம் செய்து வொருவருஷத்துக்கு முன்னேயிறந்துபோனான் அவர்பிள்ளைகளிலேவொருவரான நாஜர்தவுலாயென்கிறவர் யிப்போ கும்பினியார் சகாயத்தாலே பட்டம்கட்டிக்கொண்டு நவாபாயிருக்கிறார் யிந்தநவாபுயிடத்தில் திவான்வுத்தியோகம்வகிச்சிருக்கிற வொருவன் சாகீர் அனுபவிச்சுக்கொண்டு விவகாரங்களிலே பிறவேசிச்சபாராமல் தன் வீட்டிலேசுகம்மாயிருக்கிறான் அந்ததிவானுக்குள்ளே பேஷ்காராக வொருவன் சகலராச்சியதந்திறங்களும் விசாரிக்கிறான் யிந்தநவாபு தன் ராச்சியமெல்லாம் வுத்தியோகஸ்தாளாகிய அமீர் வுமறாக்கள் யென்றுசொல்லப்பட்ட கனவான்களுக்கு சாகீர்களாயும் சிலசமீன்தாறர்களுக்கு பரம்பரையாய் சமீன்களாகவும் பிரிச்சுக்குடுத்து சமீன்தாறர்கள் யிடத்திலேமாத்திரம் வருஷத்துக்குயிவ்வளவுயென்று திறவ்வியம்வாங்கிறார் அமானி தாலூக்காக்கள் விஸ்தாரமயில்லை அவாள்வாளுடைய ஆதீனமான பூமிக்கு அவாளவாள்பூர்விகமான அதிகாரத்தை வகிச்சு தங்களைச்சேர்ந்தகுடிகளை புருஷன் பெண்சாதியை ஆளுகிற அதிகாரத்தைப்பார்க்கிலும் மிகுந்தசுதந்தரத்துடனே ஆளுகிறார்கள் யிந்தநவாபினுடையபெரியவாள்யிடத்தில் நாற்பதுவருஷத்துக்குமுன்னே கும்பினியார் சினேகமார்க்கமாய்பிறவேசிச்சு அவாளுடையசேவகத்தில் ஆறுபட்டாளங்களையும் வகீலாக வொரு றிசைடெண்டையும் சிக்கந்தராபாதுயென்றுபேரிட்ட வூரில்வைச்சு அந்தபட்டாளங்களுடையசம்பளங்களுக்காகபட்டடைக்கல்லாரிசில்லாவொண்ணையும் நவாபுயிடத்தில் சாகீராகவாங்கி அனுபவிக்கிறார்கள் ராச்சியதந்திறத்தில் வரவரயெந்தவேலைகள் நடப்பிக்கவேணுமானாலும் றிசைடெண்டு அனுமதியின்பேரில் நடக்கிறநிர்ணயம் யிப்போவுண்டாயிருக்குது பணம்கட்டாதடலமான சமீன்தாறர்கள் யிடத்தில் வருஷந்தோறும் சேரவேண்டியபணம்வசூல்செய்யும்படியாய்யிப்போகந்தனூர்நவாபுராச்சியத்தை கும்பினியாருடைய ஆதீனம்செய்தாப்போலே அனேகம்சமீன்தாறர்களுடைய ராச்சியங்களை யிப்போயிந்தநவாபு கொஞ்சம்கொஞ்சமாய் கும்பினியார் ஆதீனம் செய்துகொண்டுவருகிறார் மேற்சொல்லிய ஆறுபட்டாளங்களுமல்லாமல பின்னும்பனிரெண்டுபட்டாளம்பரைக்கும் றிசைடெண்டுமூலமாய் கும்பினியாருடைய காயிதாவில் அலுவாலு முதலானயிடங்களில்வைச்சு றிசைடெண்டுமூலமாய் அவர்களுக்கு சம்பளம குடுத்துக்கொண்டுவருகிறார்கள் பணம்கட்டாதசமீன்தாறர்கள் பணம் கட்டாதபோது அவர்கள்பேரில் அந்த தண்டுகளிலேயிருக்கிற பட்டாளங்களில் வேண்டியசென்னங்களை அனுப்பிவிக்கிறார் யிப்போ திவான்பேஷ்காராகிய செந்துலாலா மேற்படி அதிகபட்டாள சம்பளத்தைக்குறிச்சு மாசம் வொன்றுக்கு

சராசரி மூனுலக்ஷம் ரூபாயும் நவாபுவிட்டு செலவுக்கு ...ண்ணுக்கு மூனுலக்ஷம் ரூபாயும் குடுக்கிறார் மேலும் தாஜர்முதலாகிய ... சிலவுகளும் அவருக்குபிடிக்குது அதுபோக மத்தவரவுகளை திவான் ...ஷிகார் செந்துல்லா தமக்குசம்மதியான சிலவுபண்ணிக்கொள்ளுகிறார் ...வையுகளுக்கு ரூச்சியத்தில் வருகிறவரவும் போதாமல் கடனுமேலெயேப்பவும் ...வர் சொந்தரயு படுகிறார் யிந்தநவாபு ரூச்சியமெல்லாம் சூப்பினியாருடைய ...ளைமிகவும் அடைஞ்சுயிருக்குது நான் யிந்த அயிதருபாது வந்துசேர்ந்த தினத்துக்கு மோகரம்பண்டிகை ஆரம்பமாய் வொன்பது நாளாச்சுது யிந்த பண்டிகை காஞ்சிபுரம் கெருடசேர்வையைப்போலே யிந்தஷிகறுக்கு ...முக்கியமாயிருக்குது யிந்தகாலத்தில் பகவானுடையகடாக்ஷம் யிந்த ...றிப்பிறதாகிறபடியால் யிதரமதஸ்தாளான அனேகமாயிரஞ்செனங்களும் ...ண்டிதாவது நாள்முதல் வுச்சவமுடிவுவரைக்கும் வந்திருக்கிறார்கள் சகலமானபூஜைகளையும் அங்கீகரிச்சு (யாதிறுசிபாவனாயதிறசித்திர்பவதிதாதிறுசி) யென்கிறபடிக்கு பகவான் வுலகத்தார் யெந்தபேரைக்கொண்டு யெந்தவிதமான ஆராதனையை பண்ணபோதைக்கும் அங்கீகரிச்சு யிஷ்டசித்தியை செய்துவருவாராகையால் யிந்தகாலத்தில் யிந்தஷிகறில் யென்னை பிறவேசிக்கும்படி செய்தத்துக்கு யீசுவரனை மிகவும் கொண்டாடினேன் -உகூஉ-ருத்திரிமுதல் சூலாய்மீ அஉவரைக்கும் பேகம்பசாறில் யிருக்கிற வொருதோட்டத்து பங்காளாவில் யிறங்கியிருந்தேன் அஉமுதல்சூலாய்மீ மகூஉவரைக்கும் சிக்கந்திறுபாதுக்கு சமீபமாயிருக்கும் காகாய்கூடம் பொம்மதேவ நாகன்னதோட்டத்துசாவடியில்யிறங்கியிருந்தேன் காகாய்கூடமென்கிறவூர் வெகுவாசயோக்கியமானது யிவிடத்தில் ஆறுபேர்சேவுகளை ஆள்வொண்ணுக்கு மாசம்யேழுரூபாய் சம்பளம் யேற்படுத்தி அவர்களில் அஞ்சபேரை அவாளுடையசொந்த அயாக்கிகொண்டுவரும்படியாய் திட்டப்படுத்திக் கொண்டேன் யிந்தஷிகறில் பால்சிபாய்கூடாரங்கள் நாலுவாங்கி அதைசுமக்கிறத்துக்கு நாலுபெரும் கூடாரத்துக்குவுள்ளேபோடவாங்கின சேல்பாய்களையும் கூடாரம் அடிக்கசெய்விச்சயிறனூறுமுளைகளையும் சுமக்க ரெண்டுபெருதும் ஆக ஆறுபெருதும் பெருதுவொண்ணுக்கு மாசம்வொண்ணுக்கு அஞ்சுரூபாய்விழுக்காடு நாகபூர்வரைக்கும்போக திட்டப்படுத்தினேன் டேருக்கள் அடிக்கவும்வாங்கவும் ரெண்டுகிளாசுகாறரை ஆள்வொண்ணுக்கு மாசம்யேழுரூபாய்விழுக்காடு சம்பளம்திட்டப்படுத்தி சேவுகத்துக்கு வைச்சுக்கொண்டேன் கூடார மூங்கில் ஸ்தம்பங்களை பெருதுகள் சுமக்கமாட்டாதாகையால் அதுகளையெடுக்க மாசம்யேழுரூபாய் சம்பளத்துக்கு வொருமனுஷனை வைச்சுக்கொண்டேன் மூணுபெருதுக்கு

வொரு அல்லிமுக்காடு றெண்டுவெரு ஷக்காறர்கள் கூடவந்தார்கள் அயிசரு யாதிலேயிருந்து நாகபூர்வழி வெகுகாடும் மிறுகபயமும் கள்ளர்வுபத்திரவமுமாயிருக்குதென்று தெரிந்சு வழிகாண்பிக்கிறத்துக்கு அயிசருடசது நிசை டெண்டுயிடத்தில்யிருக்கிற தபாலாபீசுறயிட்டரை தேசம்செய்து அந்தந்தசறஅத்தில் யிருக்கிற தபால்காறரை அவரவர்கள் சற அத்துவரைக்கும் கூடவந்து வழிகாண்பிக்கும்படியாய் திட்டப்படுத்திக்கொண்டேன்.-

௨௰௳ உதயத்துக்குமுன் ௫௨- மணிக்கு புறப்பட்டு -௰- மணிக்குயிதுக்கு ௯- கோசுதூரமுள்ள மேடிசர்ல யென்கிற பெரிய வூரைச் சேர்ந்தேன் வழி வெகுவிசாலம் பருக்கான்மணலாயிருக்குது குதிரை பண்டிகள் போகும் றெண்டுபக்கமும் சீதாபலச்செடிகள் யிருக்கிறகாடு அழகாயிருக்குது யிந்தவூரண்டை றெண்டொரு வோடைகள் தாண்டவேணும் மழைகாலத்தில் பிறவாகம் வரும்போது றெண்டுமூணுநாள் அந்தவோடைகள் செலம் வடியுகிற வரைக்கும் காக்கவேணும் யிந்தவூரில் கடைகள்விஸ்தாரம் யிருக்குது வேண்டியவஸ்துக்கள் கிடைக்கும் சென்னப்பட்டணத்தில் வைச்சுக்கொண்ட ஆறுபேர்சேவுகருடனே பின்னும் நாலு மருட்டிசேவுகரை கடப்பையில் சேவுகத்துக்கு வைச்சுக்கொண்டேன் யெசமானிடத்திலே யிருக்கும்பொட்டிகளில்பொருள் யிருக்குமென்று திருடர்நினைச்சுயெசமானண்டையில்யிருக்கும்பொட்டிகளை திருடுகிறவழக்கமாகையால் அப்பேர்ப்பட்ட பிறமாதம் நேரிடாமல் யிருக்கும் பொருட்டு பொருள்வைச்சிருக்கப்பட்ட பொட்டிகளை பல்லக்குகளில்வைச்சு அந்தபல்லக்குகதவுகளுக்கு பூட்டுபோட்டு பல்லக்குகளை கிறுமங்களுக்கு தூரத்தில்யிருக்கும் சாவடிகளிலும் முசாபர்காணுக்களிலும் மசீதுகளிலும் வைச்சு அவிடத்திலே சாமத்துக்கு றெண்டுசேவுகர் பாறுயிருக்கும்படி ஆறுபேர்சேவுகரை திட்டம்பண்ணினேன் போயிகளையும் அவிடத்தில்சாக்கிறுதையாய்காவல் யிருக்கும்படி திட்டம்செய்துகொண்டுவந்தேன் மத்தசாமானுகளையும் காவடிகளையும் நான்யிறங்கிறயிடத்தில் வைக்கும்படி திட்டப்படுத்தி அங்கேசாமத்துக்கு வொருசேவுகன் காவல் யிருக்கும்படி மூணுபேரை வைச்சுக்கொண்டு வந்தேன் தபால்காறரையிவிடத்தில் அற்காறுயென்றுசொல்லுகிறார்கள் அவாள் கும்பினியிலாகா மனுஷியாள்யென்று வூர்கள்தோறும் அவாளை கணப்படுத்துகிறார்கள் அவர்களை கூட அழைச்சுக்கொண்டுவந்தது யெனக்குவெகு அனுகூலமா யிருந்தபடியால் அவாளுக்கு வொருறூபாய்க்கு வுள்ளாக யினாம்கொடுத்து சந்தோஷப்படுத்திக்கொண்டு வந்தேன் கிறுஷ்ணநதிதாண்டினதுமுதல் யிந்ததேசத்தில் காக்காய் பக்ஷிகள் விஸ்தாரம்யில்லை அயிதருபாது ஷகறில் வொரு காக்காயாவது கிடையாது அந்தஷகறில் டேகையென்கிற வேட்டையாடுகிறபட்சிகளை விஸ்தாரம் வளர்க்கிறபடியால் அவிடத்தில் யிந்த காக்காய்களையும் பிழைக்கவிட யில்லையென்று தோணுது.

௨௰௧௭. காலமே -௫- மணிக்கு புறப்பட்டு -௰௨- மணிக்கு யிதுக்கு -௰- கோசுதூரமுள்ள மாஷிபேட்டையென்கிற வூரைச்சேர்ந்தேன் வழி நேத்திய தினம்போலே வெகுஅழகாயிருக்குது ரெண்டுபக்கமும் யிலுப்பைசெடிகள் தேக்குமுருக்கை சோரஞ்செடிகள யிதுமுதலானவிருக்ஷசாதிகள் வுள்ள காடு யிருக்குது மேடுபள்ளமும் யில்லாமல் பூமிசமமாயிருக்குது யிந்தமாஷிபேட்டை பெரியவூர் சகலவஸ்துக்களும் அகப்படும் மழைகாலத்தில்மிகவும்சேறு கொண்டுயிருக்குது அயிதறுபாதுக்கு சமீபத்திலே யிருக்கிற வுசேன்சாகர் யேரிமுதல் யிப்புறத்தில் யிருக்கிற வூர்கள் தோறும் யேரிகளும் நெல்லு விளைவும் செலசவுக்கியமும் கீழ் நீர்வுள்ள பூமியாயும் யிருக்குது.

௨௰௨௨- காலமே -௫- மணிக்கு புறப்பட்டு பகல்-ஒரு- மணிக்கு யிதுக்கு ௰- கோசுதூரமுள்ள பிக்கனூர்பேட்டையைச்சேர்ந்தேன் வழி முன்றெண்டு நாளையைப்போலவே செவையாயும் அழகாயும் யிருக்குது காட்டு நடுவே வழி போகுது மழைகாலத்தில் சிலவோடைகள்தாண்டவேணும் கிருஷ்ணைதாண்டினதுமுதல் யிந்தவூர்வரைக்கும் வழிபருக்கான்மணலாயிருக்குது அழுத்தமான பூமி யெந்த காலத்திலும் நடக்கிறவாளுக்கு பிறயாசை யில்லாமல் யிருக்குது யிந்தபிக்கனூர்பேட்டை பெரியவூர் சகலவஸ்துக்களும் அகப்படும் வொரு சிவாலயமும் பிறும்மணாள்வீடுகளும் ரெண்டுபெரியயேரிகளும்யிருக்குது நான் பிறும்மணாள் வீட்டிலே யிறங்கினேன் மேடிசற்லவூர் முதல் யிதுவரைக்கும் சமீன்தாறர்களுடைய பூமி வூர்கள்தோறும் பிறும்மணாள்வீடுகள் வுண்டு சமீன் தாறருக்குள்ளே டஸ்தியானவூர்களில டப்டேதுயென்று வொரு அதிகாரஸ்தனும் வொரு அவால்தாறனும் யிருக்கிறார்கள யிந்தவழியில யிங்கிலீஷ்தண்டுகள யிறங்கிறமகிலிவூர்களில் தண்டுக்கும்வண்டியசாமானுகள்சமுதாயிக்கிறத்துக்காக கொத்தவால்யென்று வொருசேவகனை சமீன்தாறர்கள் வைச்சு யிருக்கிறார்கள் கணக்கனும் றெட்டியும் அவனுக்கு துணையா யிருக்கிறார்கள் மேடிசற்லவூரில் யிறங்கினவுடனே அந்தவூர்கணக்கனை புசலாயிச்சு யின்னூர் வருகிற படியால் யிடம்முதலானது பிறும்மணாள்வீட்டில் வசதி செய்விச்சு சாமானுகள் சாக்கிறுதை செய்யவேண்டியது யென்று வொருகடுதாசியெழுதிக்கு(ம்)த்து சிலடைசாக்சரும் குடுத்து அந்தவூர்மனுஷனுடனே யென் சேவுகன் வொருவனையும்கூட்டி மறுநாள்யிறங்கவேண்டியவூருக்கு அனுப்பிக்கொண்டுவந்தேன் யிந்தவுபாயத்திலே மகிலிகள் தோறும் தொந்தரவு யில்லாமல் யெனக்குயிடம்கிடைச்சுகொண்டு வந்துது.

௨௰௩- காலமே -௫- மணிக்குபுறப்பட்டு -௰- மணிக்குயிதுக்கு -௫- கோசு தூரமுள்ள காமாறெட்டி பேட்டையைச்சேர்ந்தேன் வழிகடினமா யிருக்குது கறுத்தகளிமண் பூமி நடக்கிறவாளுக்கு கால்புதையுது மழைகாலத்தில் மிகுந்தசேறும் வெய்யல்காலத்தில் நடக்கிறவாளுக்கு முள்ளுபோலே காலுக்குதை

க்கிறதுமாயிருக்குது யிந்தவழியில் நடக்கிறபிறயாசை யிதுக்கு அப்பால் சில தூரம் பருக்கான்மணலான பூமியில் நடக்கிற சவுக்கியத்தையும் நினைக்க வொட்டாது யிந்தவழியில் சிலவோடைகள் தாண்டவேணும் யிந்தகாமாரெட்டிபேட்டை நல்லவசதியாயிருக்குது செல சவுக்கியம் வுண்டு யேரியிருக்குது கடைகள் வுண்டு யெல்லா வஸ்துக்களும் அகப்படும் நான் பிறும்மணாள் வீட்டில் யிறங்கினேன் கிறுஷ்னை தாண்டின யிப்பாடு ஊர்கள் தோறும் நல்ல அரிசி அகப்படுது.

உ௰௪உ காலமே -௬- மணிக்கு புறப்பட்டு -௰- மணிக்கு யிதுக்கு -௫- கோசதூரமுள்ள மல்லுபேட்டை யென்கிற வூரைச்சேர்ந்தேன் வழி மிகவும் கறுத்தகளிப்பாங்குபூமி வெகு ஆழமான வோடைகளும் யேரிகளும் மடுக்களும் தாண்டவேணும் யிந்தவூர் கொஞ்சம் கிலப்பட்டு செலவசதியான யேரியும் வொருபாழுங் கோட்டையும் வுண்டாயிருக்குது முசாபரிகளுக்கு வேண்டிய சாமானுகள் கொஞ்சம் யேறக்குறைய அகப்படும் யிவிடத்தில் யிறங்க யிடம் யில்லாமல் வொரு சாவடிபண்ணைடைமேலுகூடாரம் அடிப்பிச்சு அதில் யிறங்கினேன் அயிதறுபாது தாண்டினதுமுதல் ஊர்களில் பலமான கோட்டைகள் யில்லை சிலவூர்களில் கொத்தளங்கள்மாத்திரம் கட்டியிருக்கிறார்கள்.

உ௰௫உ காலமே -எ- மணிக்குபுறப்பட்டு -௰௧- மணிக்கு யிதுக்கு -௫- கோசதூரமுள்ள யீதல்வாயென்கிற கிறாமஸ்தலஞ்சேர்ந்தேன் வழியில் வொருகோசதூரத்தில் யீதல்கெண்டியென்றும் யீதல்காடுயென்றும் சொல்லப்பட்ட வொருநெருங்கியகாடுயிருக்குது அவிடத்தில் வழிக்குரெண்டுபக்கங்களிலும் சின்னமலைகள் யிருக்குது அதுநடுவே வழிபோகுது அந்த யீதல்காடு வரைக்கும் மிகவும் கறுத்திருக்கிறகளிப்பாங்குபூமி அதுக்கு அப்பால் கல்பாங்காயிருக்குது யிந்தவழியில் மிகவும்கள்ளர்பயம்வுண்டு யெல்லாரும் பயப்படும்படியான யிங்கிலீஷ் துரைகளைத்தானே யிந்தவழியில் அடிச்சுபறிச்சார்கள் நான்மல்லுபேட்டையிலே யிருந்து சிலபேர் ஆயுதபாணிகளை அழைச்சுக்கொண்டுவந்தேன் அவர்களையும் அயிதறுபாதில் சேவுகம்வைச்ச துப்பாக்கிகள்வுள்ள அஞ்சுபேர்சேவுகரையும் யுத்தசன்னத்தராக்கி அங்கங்கே துப்பாக்கிகளை சுடும்படியாய் திட்டப்படுத்திக்கொண்டு யிந்தகெண்டியைத் தாண்டினேன் யிப்பேர்ப்பட்டதிருடர்பயம் வுள்ளதேசத்துக்கு துப்பாக்கிகள் வெகுசகாயமாயிருக்கிறபடியால் கடப்பையில் ரெண்டுதுப்பாக்கிகள் நான்வாங்கினது வெகு அனுகூலமாச்சுது யிந்தவழியில் சிலவோடைகளும் தாண்டவேணும் யீதல்வாய் ஊருக்கு சமீபத்தில் மழைகாலத்தில் மிகவும் நீரோட்டமாயிருக்கப்பட்ட ரெண்டுயேரிகலிங்குலைதாண்டவேணும் அந்தகலிங்கல் ஆழமாயிருக்குது கூடாரம் அடிக்கப்பட்ட முளைகளுடைய கண்டவாளத்தை அந்தயேரிகலிங்கல் தாண்டும்போது அடிச்சுக்கொண்டு போய்விட்டுது யிந்தவூர் யீதல்வாய் சமஸ்தானத்துக்கு சேர்ந்தது

கொஞ்சம்பஸ்தியானாலும் யிவிடத்தில்வேண்டியவஸ்துக்கள் அகப்படும் யிவிட
த்திய ஆலயம்பெரிசாய் கட்டாமல்போனாலும் யிந்தசமீன்தாறர் தென்தேசத்தி
ன்வழக்கப்படிக்கு சகலமானஷோடசவுபசாரத்துடனே சுவாமிக்கு ஆராதனைசெ
ய்விக்கிறார் ஆலயத்தைச்சுத்திலும் முப்பது பிராம்மணாள்வீடுயிருக்குது யிந்த
மிலேச்சராச்சியத்தில் யிந்தஸ்தலம் கும்பிட்டியில் தாமரை முளைச்சாப்போலே
யிருக்குது திருப்பதிவிட்டபிற்பாடு ஷோடசோபசாரமாய் ஆராதனை நடக்கிற ஆல
யம் யிதைத்தான்கண்டேன் யென்னுடையவிசாரணையிலேயும் வேறேயிருக்கு
துயென்று கேழ்விப்படயில்லை யிந்த ஆலயத்தில் பிறதிஷ்டிச்சிருக்கிற பரமாத்
துமாவினுடைய கடாக்ஷம் யிந்தவூர்சமீன்தாறருடையவம்சஸ்தாளுக்கு அவ்ழ
ச்சால்டெசும்படியான பிறத்தியக்ஷமாயிருக்குது யிந்தசமீன்தாறர் சறாட்பின்
பட்டேலுயென்கிற வொரு அதிகாரஸ்தன் யிந்ததேவஸ்தானவிசாரணை செய்கி
றான் யிவிடத்தில் -௨௰௬௳-வரைக்கும் யிருந்தேன்.

௨௰௭௳ காலமே-௬ மணிக்கு புறப்பட்டு -௰௨- மணிக்கு யிதுக்கு ௬-கோசு
தூரமுள்ள செகனம்பல்லையென்கிற வூரைச்சேர்ந்தேன் வழியில்வொருகோசு
தூரத்தில் டிச்சுபல்லை யென்கிற வூர்யிருக்குது அதுவரைக்கும் வொரு சின்ன
கணவாய் நடுவே வழிபோகுது முன் தாண்டினகணவாய்களைப்போலேயிதுபய
முள்ளதாயிருக்கயில்லை பூமி சமமாயிருக்குது பருக்கான் மணலும் சொஞ்சம்
கல் மேடுமாயிருக்குது வழிக்குரெண்டுபக்கமும் முருக்கஞ் செடிமுதலான வி
ருக்ஷங்களுள்ளகாடுயிருக்குது யீதல்வாய்வூரில் யிருக்கிற ராமமூர்த்தி அந்த வூரி
ல்பிறதிஷ்டை யாகிறத்துக்கு முன்னே டிச்சுபல்லையில் பிறதிஷ்டை பண்ணுகிற
தாய்நினைச்சு வொரு பெரிய கோவில் கட்டி யிருக்கிறார்கள் அந்த ஆலயம்தான்
வாசஞ்செய்ய யோக்கியப்பட்டதல்லவென்று பரமாத்துமா சில திருஷ்டாந்த
ரங்களினாலே தெரிவிச்சபடியால் டிச்சுபல்லை வூரில் கட்டியிருக்கிற கோவில்கள்
பாழடையும்படியாய் போட்டு வைச்சார்கள் டிச்சுபல்லை முதல் வொரு கோசு
தூரம்வரைக்கும் வழிவிசாலம் பருக்கான்மணலாயிருக்குது மிகுந்தகாடுகளி
ல்லை அப்பால்வொருகோசுதூரம் கணவாய்நடுவே வழிபோகுது அந்தவழிக்கு
ரெண்டுபக்கமும் நெருங்கியகாடும் மலைச்சந்துகளுமாயிருக்குது யிந்தகணவா
ய்மிகவும் பயங்கரமானதல்ல யிவிடத்தில் சில மொகலாய் டாணாதாறர் துபாக்கி
கள் பிடிச்சுக் கொண்டு யிருக்கிறார்கள் அவர்கள் வரப்பட்ட வாளிடத்தில் ஆள்
வொண்ணுக்கு ரெண்டுபைசா வாங்கி பாட்டைசாரிகளை கார்க்கிறவாள்போலே
காட்டுகிறார்கள் யிந்தசெகனம் பல்லை யென்கிற வூரில் ரெண்டுசின்ன தேவாலய
மும் பிராம்மணாள்வீடுகளும்கடைகளும்யிருக்குதுசகலவஸ்துக்களும்அகப்படும்
அழகான ஸ்தானக்கரைவுள்ள யேரியிருக்குது நான்பிராம்மணாள் வீட்டிலே யி
றங்கினேன் யிதுக்குசமீபத்தில் காட்டுநடுவே நரசிங்கக்ஷேத்திறம்யென்று
வொருஸ்தலம் யிருக்குது அதுவெகுமகத்துவமுள்ளது அதுக்குநாலுமயிலி

தூரத்தில் வேமலவாட யென்கிற வொருமகாக்ஷேத்திரமிருக்குது அதுபீமே
சுவரருமேசுவர க்ஷேத்திரம்யென்று சொல்லுகிறார்கள் அதுபீமகவியினுடை
யசென்மபூமியிந்த பிருந்தியத்தில் புலிகளால் மாட்டுகளுக்கு அடிக்கடி பயம்
நேரிடுது

உ௰அ௳ காலமே -௬- மணிக்கு புறப்பட்டு -௰உ- மணிக்குயிதுக்கு ௯-கோ
சு தூரமுள்ள தூதுகாம்யென்கிற வூரைச்சேர்ந்தேன் வழி வெகுவிசாலம்மணல்
பாங்கு அதிகமாய்காடுகள்யில்லைபுலிகள்பயம் வுண்டு மேற்கண்டசெகனம்பல்
லியிலேயிருந்துயிந்த தூதுகாமுக்கு றெண்டு மூணு வழிகள்யிருக்குது அது
களில் நான்வந்தவழிகொஞ்சம் சுத்தானாலும் சவுக்கியமாயிருக்குது மேலெழு
திய செகனம்பல்லி வூருக்கு றெண்டு கோசு தூரத்தில் ஆறுமூறு யென்கிற
வொரு பஸ்தியான வூர்யிருக்குது அந்த வூர்மேல் வருகிறவழி வசதியல்ல செக
னம்பல்லிக்கு நாலுகோசுதூரத்தில் பாலகொண்டயென்று ஷகறுபோலயிரு
க்கிற வொருபஸ்தியான வூர்யிருக்குது செகனம்பல்லியிலேயிருந்து யெந்தவழி
வந்தாலும் பாலகொண்டவூர் பிறவேசிக்கவேணும் நான்வந்தவழிபாலகொண்
டைக்குமத்தியில் மத்தொரு வூரும் தென்படாமல் நேராகவந்தது அயிதரு
பாது விட்டதுமுதல் தம்பளசாதியார் வேண்டிய பால்தயிர் வித்துக்கொண்
டுவந்தார்கள் கறிகாய்கள் பாலகொண்டை தவிர நடுவே யெங்கும் அகப்படா
து பாலகொண்டைக்கு அஞ்சுகோசுதூரத்தில்றுமனபேட்டையென்கிற வொ
ருவூர்யிருக்குது அவிடத்தில் பல்லக்குகள் ஆடுகிற கெஞ்சிபா கடதாசி முதலா
னதுகள்செய்து அயிதருபாதுக்குகொண்டுபோய்விக்கிறார்கள் அந்தவூரில்ஜினி
கர்யென்கிற முச்சியர் அனேகம்பேர் கொஞ்சம் பணமுள்ளவர்களாயிருக்குறா
ர்கள் யிந்ததேசத்தில் தம்பளசாதியார் புஷ்பங்களும் பால்தயிர்களும் கொண்
டுவந்துகுடுத்து மேளவாத்தியம்செய்கிறார்கள் அம்பட்டர் தீவட்டிபிடிக்கிறார்
கள் பாலகொண்டைக்கு வொருகோசு தூரத்தில் மூகலாயென்கிறவொருசின்
னவூர்யிருக்குது அந்தவூர்வழியாய் யிந்ததூதுகாமுக்குவரவேணும் யீதல்வாய்
முதல் யிந்ததூதுகாம்வரைக்கும் நல்லவழியாயிருக்குது சேறுகளுடைய பிற
யாஸைஅதிகமாயில்லை தூதுகாம்யென்கிறவூர்ஆறுமூறுபறகாணாவில் சேர்ந்த
து மிகவும்பஸ்தியானதல்ல யிவிடத்தில்ஆறுபிறும்மணாள்வீடுயிருக்குதுபட்டே
லின்அதிகாரஸ்தனுடைய குமுஸ்தாவும் பரசையென்கிற படகுவிசாரணைகற்த
னும் யிருக்கிறார்கள். யிந்தவூர் கோதாவிரிதீரம் நல்லஜுதாரியான காசி பாட்
டை யிந்தவூருக்கு வொருநாழி வழியில் கோதாவிரி நதி யிருக்குது. அவிடத்தி
லே யிருக்கிற ஸ்நானக்கரை வசதியில்லை. அங்கே நிழலும்யில்லை. யிப்போ நதி
பூர்னப்பிறவாகமாயிருக்குது, யிவிடத்தில் நதி சுமாறு வொருநாழிவழி தூர
ம்பரப்பாயிருக்குது- யிந்தநதியின் நடுவே சிலதிட்டுகள்யிருக்குது நதிக்குஅக்
கரையில்ஸொன்ன யென்கிற வொரு பிறும்மண அக்கிறாரம் யிருக்குது. அவிட

த்தில் மாத்துவ பிரும்மணாள் விஸ்தாரம் யிருக்கிறார்கள் அவர்களே தீர்க வாசிக ளாயிருக்கிறார்கள் ஸ்மார்த்தாள் பத்துவீட்டுக்காறர் யிந்ததூதுகாம் ஊரிலும் அந்த அக்கிறாரத்திலும் யிருக்கிறார்கள் வேண்டியபதார்த்தங்கள் அகப்படும் தூதுகா முக்கு வொருபக்கம் மேல் சொன்ன பாலகொண்டையும் யிந்தநதிக்கு அக் கரையில் நிர்மலா யென்கிற வெருஷிகறும் யிருக்குது அந்த வூர்களில் பட்ட ணங்களிலே யகப்படுகிற சகலவஸ்துக்களும் அகப்படும் கோதாவிரி தீரத்தில் யிருக்கும் குசதற்டணம்யென்கிற ருமக்ஷேத்தறத்துக்கு மேல் சொல்லிய செக னம்பல்லயிலேயிருந்துவழிபோகுது. அது யிவிடத்துக்கு நாலுகோசு தூரம் யிருக்குது அந்தவழி நாகபூர்வழிக்கு வொத்தியிருக்குது வெகும்பேர் பிரும்ம ணாள் தீர்த்தவாசிகளாய் அவிடத்தில் வீடுகட்டிக்கொண்டுகுடியிருக்கிறார்கள். அ யிதருபாதில் நான்யிருந்த சுமாறு யிருவதுநாள்வரைக்கும் யிந்தபிருந்தியங்க ளில் அடுத்தவீட்டுக்கும் போசக்கூடாமல் யிருக்கத் தக்கனதாய் அதிகமழை பேஞ்சு யேரிகள் கால்வாய்கள் முதலானது நிறைஞ்சுது அந்தகாலத்தில் யிட ம் கிடையாத யித்தசின்னவூர்களில் நான் அகப்பட்டுக் கொண்டேனே யானால் வெகுவருத்தப்படவேணும். அப்படிவரவொட்டாமல் ஸ்ரீருமர்யேதோசிலகார ணத்தினால் அயிதருபாதுஷிகறில் யென்னை அட்டிப்பட்டு யிருக்கும்படி செய் துமேலும் ஷிகறைவிட்டு பிறயர்ணமான பிறதிதினமும் நான்யிறங்கிபோசன ம்செய்தபிற்பாடு சாயங்காலமுதல் வுதயமாகிறவரைக்கும் மழை பேஞ்சு வெ ளியாங்கும்படி கடாக்ஷிச்சுக்கொண்டு வந்தார் அயிதிருபாதை விட்டது முதல் யித்தகோதாவிரி தீரம்வரைக்கும் நடுவேயிருக்கிற சமீன்தாரறர் சாகீர்தாறர் பற க்கணுதாறர் முதலானவர்கள்பலவான்களல்ல கலகப்பிறியாளுமல்ல. குடிகள்ரு ஜியின்பேரில்டணம்வசூல்செய்கிறார்கள் அயிதருபாதுக்குஅப்புறம்யிருக்கிறசமீ ன்தாறர்களைப்போல வூர்கள் தோறும் கோட்டை கொத்தளங்களை பலம்செய் துகொண்டு வூர்களைபாழாக்கிறதில்லை. கிறுஷ்ணை தாண்டினது முதல் கோதா விரிதீரம்வரைக்கும் அந்தந்தமசிலிகளில் நல்லவெத்திலை அகப்படாது. யிறங்கி னவூர்களில் வெத்திலைதோட்டம் யிருக்கிறயிடத்தை விசாரிச்சு சொந்த மனுஷி யாளை அனுப்பியிள்சானவெத்திலைவரவழைச்சுக்கொண்டால்அநுகூலமாயிருக்கு து. அயிதருபாத்தில் யிருக்கிறகனவான்களெல்லாரும் பழுத்தவெத்திலைபோட் டுக்கொள்ளுகிறார்கள் யீதல்வாயில் வெத்திலைநயமாயிருக்குது பாலகொண்டை யில் பழுப்புவெத்திலை கிடைக்கும். கடப்பைமுதல் கோதாவிரிதீரம்வரைக்கும் முழுப்பாக்குவிக்கிறார்கள் அந்தபாக்கில்நல்லதாய்பொறுக்கிவெட்டிப்போட்டு க்கொண்டால் அது நம்மிட தேசத்துபாக்கைவிட ருசிஅதிகமாயிருக்குது. வே விச்சபசக்கிலே றெண்டாய்பிளந்தபாக்கு யிவிடங்களில் கிடையாது. யேழைகள் விஸ்தாரம் தாம்பூலம் போட்டுக்கொள்ளுகிறதில்லை பாக்கைமாத்திரம் மெல்லு கிறார்கள் கிறுஷ்ணைதாண்டினதுமுதல் மகிலிவூர்கள்தோறும் அரிசியைப் போ

மேல் தித்திப்பான கோதும்பை மாவைவிக்கிறார்கள். யிந்ததேசத்தில் ரொட்டியே சாப்பிடுகிறார்கள் அன்னஞ்சாப்பிட்டுக்கொண்டுவந்தால் சரீரத்துக்கு தடையில்லை யென்று யிந்ததேசத்தார் சொல்லுகிறபடியால் நாங்களும்வொருவேளைராத்திரியில் அன்னத்துடனே கோதும்பை ரொட்டியும் சாப்பிட்டுக் கொண்டுவந்தோம். அது ஆரோக்கியமாகவே யிருக்குது கடப்பைவிட்டதுமுதல் தமிழ் பாஷை பேசுகிறவாள் அபூறுபமாயிருக்கிறார்கள் தெலுங்கு சற்வசாதாரணமாயிருக்குது ருசமாய் கேழ்விக்கு வுத்திரவு குடுக்கிறார்கள் யிந்தவூர் அந்த வூருக்கு யெவ்வள்வுதூரமென்று கேட்டால் யெனக்கென்னதெரியுமென்றும்சொல்லுகிறார்கள் படுத்துக்கொண்டான்யென்று சொல்லுகிறத்துக்கு படுத்தானென்றுசொல்லுகிறது போலே சொல்லுகளை குறுக்கி பேசுகிறார்கள் யிவிடங்களிலே யிந்துஸ்தானமும் துலுக்குப் மிகவும்யிந்ததேசபாஷையாகையால் அதுகளைதெலுங்குடனே கலந்து பேசுகிறார்கள் யிந்த தேசத்தில் மழை காலத்திலே யீகளுடைய வுபத்திறவம் அதிகமாயிருக்குது கிருஷ்ணமுதல்கோதாவிரிவரைக்கும் திருவிடாள் வொருவருமில்லை ஆந்திரள் யென்கிற தெலுங்கு பிறும்மணாள் வெலநாடு காசலநாடு யென்கிறதெக்கைகளை விசாரிச்சு சம்மந்தங்கள்செய்கிறாப்போலே யிவிடத்திய தெலுங்குபிறும்மணாள் செய்கிற தில்லைகோத்திறமும் றிஷிகள்வுண்டாக்கிய பிறவரையென்கிற மந்திறமும் கலவாமல் சம்பந்தங்கள் செய்கிறார்கள். லவுகீகாளை வேபாரிகள் யென்றுசொல்லுகிறார்கள்மத்தியதேசம் சித்தாந்தி பஞ்சாங்கத்தினாலே கோதாவிரிதீர்த்தில் அனேகம் சித்தாந்திகள் குணிச்சபஞ்சாங்கங்களை சரிபார்த்தேன் திதி வார நக்ஷத்திற யோககரணங்கள் நாளின்பிறமாணம் முதலானதுகள் அரை நாழிகை யேறக்குறையசரிப்பட்டுவருது யிந்ததேசத்து பஞ்சாங்கங்களில் சூனிய திதிகளும் திதித்துவங்களும் யெழுதுகிறதில்லை, பஞ்சாங்கக்காறருடைய மூடத்தனத்தினாலே திதிகள் முழுகிப்போகுது வைதீகாள் பாதைசொக்காயில்லாமல் ஆசீர்வாதஞ்செய்கிற சம்பிறதாயம் யில்லை வைதீகாள்யெல்லாரிடத்திலும் பஞ்சாங்கங்கள் யிருக்குது பஞ்சாங்கம்படிக்கிறது கேழ்க்கிறதுமாத்திரம் வெகுபிறபல்யமாயிருக்குது யிந்ததேசத்தில யிப்போ மழைகாலமாகையால் தென்தேசத்தில் கார்த்திகைமாசத்திலே செய்கிற பூசைகளைப்போல ஆவணிமாசத்தில் சிறுவணசோமவாரமென்றும் நித்தியஅபிஷேகமென்றும் சக்திபோசனமென்றும் செய்கிறார்கள் வீட்டுகாரியங்களில் யிந்த தேசத்திலே புருஷாளைப்பார்க்கிலும் ஸ்திரீகளுக்கு கருத்து அதிகமாயிருக்குது கடப்பைமுதல் கனமான வற்தகாளாயும் பணக்காறராயும் யிருக்கப்பட்ட யிடங்களிலே வொவ்வொருவேளையிந்துடாங்கர்வாறு யென்றுசொல்லப்பட்ட கள்ளர் பெருதயிரியமாய் சாயங்காலவேளையில கும்பலாய்கூடிக்கொண்டு கண்ணுக்குதென்பட்டவரை யெல்லாம்கொண்ணு பணக்காறர்வீட்டில்புகுந்து யெசமானகளைகுத்திகொண்ணுட்போ

ட்டு யிருக்கிறவனைத்தேடி யெடுத்துக் கொண்டு அரை நாழிகையில் மாயமாய்ப் போய்விடுகிறார்கள் அயிதராபாது யிங்கிலீஷ்தண்டு நடுவில் யிப்படிநடந்தது யிந்ததேசத்தில் அவாளுடைய பயம் விஸ்தாரமாயிருக்குது சாத்துவீகாளுடைய யோக்கியதை அப்பேர்ப்பட்ட துஷ்டாள் யில்லா விட்டால் பிறபலமாகாதா கையால் அவாளும் யீசுவரன் திருவிளையாட்டுக்கு வுள்பட்டவர்களானபடியால் அவர்களையும் யீசுவரர் றட்சிக்கிறார் கிறுஷ்ணை நதிவரைக்கும்கோசுயென்கிறது றெண்டுநாழிவழி கிறுஷ்ணைநதிதாண்டினதுமுதல்கோதாவிரிதீரம்வரைக்கும் கோசுயென்கிறது வொண்ணரைநாழிவழி யிதை அல்காகோசுயென்று சொல்லுகிறார்கள். யிவிடத்துகோசு றெண்டுமயிலுக்கு கொஞ்சம் குறைச்சலாய் சொல்லவேணும் நம்மிட வொருநாழிவழி யிருவத்தைஞ்சு நிமிஷத்துக்கு நடக்கும்படியாயிருக்குது யிந்தநிதானத்தைப்பார்த்துக்கொண்டுஅந்தந்தவூர்களுக்குண்டாகிய வழிகளை நிதானிச்சு யெழுதிவருகிறேன் யினிமேல் யெழுதிவருகிறதும் யிந்தநிதானமாகவே யிருக்கும் கோதாவிரி தீரத்தில் சனிவாரம்வரைக்கும்யிருந்து தீர்தவிதிமுதலானதுகள் செய்துக்கொண்டேன்.

௫௰௧௨ -௰௨- மணிக்குப்புறப்பட்டு -௪- மணிக்கு யிதுக்கு -௫- கோசுதூரமுள்ள நிர்மலாயென்கிற ஷகறைச் சேர்ந்தேன் வழி நேத்தியதினம் போலவேயிருக்குது வழியில் ஆழமான வோடைகள் தாண்டவேணும் பருக்கான்மணல் நதிதாண்டின வுடனே யிங்கிலீஷ்காறர் யிறங்கிற டங்காளா வொண்ணு யோக்கியமாய் கட்டியிருக்குது யிப்பால் மூணு சின்னவூர்களும் முன்னேபந்தோபஸ்தா யிருந்து யிப்போ பாழாயிருக்கிற சில டாழூங் கோட்டைகளும் யிருக்குது யிந்தஷகறில்சகலவஸ்துக்களும் அகப்படும் சகலவித வேலைக்காறரும் யிருக்கிறார்கள் ஊருக்குசுத்திலும் வுள்ளேயும் குண்ணுகள் விஸ்தாரம்யிருக்குது வீடுகள்பெரிசு ஊரைச்சுத்திலும் தோட்டங்களும் யேரிகளும் யிருக்குது முன்னாலெ ஆர்காட்டுசுபாவுக்கு ரூயசி சர்வாதிகாரியா யிருந்ததுபோல யிப்போயிவிடத்தில் வொருபறகாணுசாறன் யிருக்கிறான் தெசமுகி தெசபாண்டியர்களும் கொத்தவால்முதலான அதிகாரஸ்தாளும் யிருக்கிறார்கள் நூறுபிறும்மணாள்வீடுகளும் வொருதேவாலயமும் யிருக்குது யிவிடத்தில்யிறங்கினேன் யிந்தபிறும்மணாள் யெல்லாரும் சபாபதியென்கிறவொரு பிறும்மணனுடைய ஆக்கிடாடனை படிக்கு நடக்கிறார்கள கன்னார்வீடுகள விஸ்தாரம்யிருக்குது நிர்மலா பஞ்சபாத்திரமென்று யிந்ததேசங்களில் பிறசித்தமாயிருக்குது யிந்தவூரில் வொருபஞ்சபாத்திரம் பார்க்கவேணுமென்றாலும் கிடையாது தன்மகளுடைய பிறவுடத்தனம் பிதாவுக்குவுதவியில்லாததுபோல யெந்தயெந்தயிடங்களில் யெந்தயெந்தவஸ்துக்கள் வுண்டாகுதோ அதுகள் அந்த அந்தயிடத்தாருக்கு வுடயோகமும் அனுபவமும் யில்லாமலிருக்குது நிர்மலாமுதல் யிருக்கிற நடால்காரர்கள் நாகபூறைச்சேர்ந்தவர்கள் நான் யிவிடத்தில்யிருக்கும் நாளூர்

முன்ஷியைக்கொண்டு நாகபூர்வரைக்கும் வொரு தபால்காரனை மசலீ மசலி. க்கு கூடவரும்படி திட்டம்பண்ணிக்கொண்டேன் யிந்தவூரை நான்வந்து சேருகிறத்துக்குமுன்னமே யிந்தவூர் அமுல்தாரனுக்கு வுத்தியோகம் போய்விட்டபடியால் தேசபாண்டிய வெங்கட்டராயர் யென்கிறவராக் கொண்டு யெகலாபாதுவரைக்கும் கூடவரும்படியாய் அஞ்சுபேர் ஆயுதபாணிகளான சேவகரை தயாராய் வைச்சுக்கொண்டேன் யிந்த நிர்மலாவில் துருசா யென்பவன் நிசாம்பிடத்தில் வுத்தியோகம் செய்து மெமூல பணங்களை பேசமானுக்கு அனுப்பிவைக்காமல் தன்கையில் சேர்ந்த பூமியை ஆக்கிரமித்துக் கொள்ள வேணுமென்று கோட்டைகட்டி தான் யிறந்துபோகிற பரியந்தம் பேசமானுடனே சண்டை பண்ணிக்கொண்டு ராச்சியத்தை அனுபவிச்சுக்கொண்டு யிருந்தான்.

அக்டோபர் ௨௨ காலமே ௬ மணிக்கு புறப்பட்டு ஒரு மணிக்கு யிதுக்கு ௧௪ கோசுதூரமுள்ள [illegible] யென்கிற ஊரைச்சேர்ந்தேன் வழி வெகு பிறயாசையாயிருக்குது கறுத்த களிமண் பூமி மழைகாலத்தில் வொரு அடி யெடுக்கலெயாயிருக்கும் சேறும் கல்லும் கலந்திருக்குது. யேழு மலைகள் யேறி யிறங்கவேணும். [illegible] காடும் புலியும் வழியில் அங்கிரி யென்கிற ஊரும் [illegible] யிருக்குது. அங்கிரி ஊரண்டை வொரு [illegible] மழைகால மாகையால் யிதுவரைக்கும் பின்னும் அ[illegible] தேடோடு கொண்டே யெல்கிறவூரில் [illegible] அந்தவழியில் சத்திரம் சமீபமா யிருந்தாலும் மழைகாலத்தில் நடக்கக்கூடாது. யிந்த [illegible] யென்கிறவூர் [illegible] பிராம்மணாள் வீடுகளும் சாவடிகளும் யிருக்குது [illegible] யிறங்கினேன்.

௨௩ காலமே ௬ மணிக்கு புறப்பட்டு ௧௨ மணிக்கு யிதுக்கு ௭ கோசுதூரமுள்ள [illegible] யென்கிற ஊரைச்சேர்ந்தேன். வழி [illegible] லயே பிறயாசையாயும் மலைகள் யேறி யிறங்கிறதுமாயும் யிருக்குது கல்லுகள் மாத்திரம் யில்லை [illegible] மலைகளைக்காணலாம் வழியிலே சின்ன ஆறுகள் யிருக்குது அதுகளில் யிறங்க வசதியில்லை. கடம் யென்கிற வொருநதி தாண்ட வேணும் அந்தநதி அகலமில்லாமல்யிருந்தாலும் தாண்டுகிறது தொந்தரவாயிருக்குது [illegible] முதலானதுகள் [illegible] போகமாட்டாது. கும்பினி தபாலும் ரெண்டு மூணு நாள் யிடத்திலே தடங்கலாகுது மேட்டிலேயிருந்து மிகவும் பள்ளத்திலே யிறங்கி நதியண்டை மேட்டுறவேணும் யிந்தவூர் வெகு சின்னது முசாபரிகளுக்கு வேண்டிய வஸ்துக்கள் கொஞ்சமே தக்குறைய கிடைக்கும்.

௨௪ காலமே ௬ மணிக்கு புறப்பட்டு ௨ மணிக்கு யிதுக்கு ௰ கோசு

தூரமுள்ள யேதலாபாதுயென்கிற வூரைச்சேர்ந்தேன். வழியில் அடூர்யென்கிறவூர்வரைக்கும் கறுத்தகளிமண்பூமி மழைகாலத்தில் கால்புதையும்அடூர்அண்டையில் வொருபெரிய யேரியும் சிலசின்னவோடைகளும் தாண்டவேணும். வழிநேத்தியதினம்போலவே யிருக்குது வழியினுடைய பிரயாசையை யெழுதிமுடியாது. அடூர்முதல் யேதலாபாதுவரைக்கும் முக்கால்மலையாயிருக்குது சிறுகல் பாங்கு பூமி நடக்கிறதற்கு கஷ்டமாயிருக்குது. மெகலசெண்டியென்று வொருபிறசித்தமான கணவாய் தாண்டவேணும் யிந்த கணவாயினுடைய காட்டில் பல்லயங்கள்கூட நுழையமாட்டாது வெகு நெருக்கமுள்ளதாயிருக்குது. புலிகள்பயம் அதிகம் வழியில் புலிகளுடைய [illegible] நடந்தோம் [illegible] ர்கள் வொருவரைவொருவர் நீங்கி [illegible] கள் கொளுத்திக்கொண்டு வந்தோம் மலைகள் பெரிகள் நடுவே வழிபோகுது. நிர்மலாவூர் முதல் வழியில் யீகள்நிகளமாய் மொய்க்கிறது. அழகாயிருந்தாலும் மனுஷியாளை மிகவும்கடிச்சு வுபத்திரவப்படுத்துது. யிந்த காட்டில் நடக்கும்போது செடியின்கிளைகளை வொடிச்சு கணவாய்தாண்டுகிறவரைக்கும் யிந்தயீகளை வோட்டிக்கொண்டே [illegible] யிந்த கணவாய் மலைமேலே [illegible] யென்கிற வூர்வரைக்கும் யிருக்குது. கணவாய்நடுவே யிருக்கிற கல்லுகளை யெல்லாம் ஆட்டினுடைய அடிகளைப்போலே யீசுவரன் சிருஷ்டிச்சுயிருக்கிறபடியால் யிந்தமேகலசெண்டியென்று சொல்லுகிறார்கள். யிந்தயேதலாபாதுயென்கிறவூர் ஷகர்போலவே யிருக்குது. சகலவஸ்துக்களும் அகப்படும் சகலவிதம்வலைக்காறரும் வுண்டு நவாபுயென்று வொருஅமுல்தாறன் யிருக்கிறான் செலசவுக்கியமானவூர் பிராமணாள் வீடுகள் யிருக்குது வூருக்கு வெளியிலே பிரமசாரிபாவாமடம்யென்று வொருமடமும் வூருக்குநடுவேயின்னம்சிலமடங்களும் யிருக்குது நான் வொருமடத்தில் யிறங்கினேன். பாப்ஜோடாயென்கிறவூர் முதல்மேலேயெழுதப்போகிற வோனியென்கிறவூர்வரைக்கும் முனிருல் முல்க் யென்கிற திவானுக்கு சாகிர்விட்டிருக்குது கூடவந்தவர்களுடைய ஆசோதக்கும் சாமானுகள் சம்பாதிச்சுக் கொள்ளவும் அஞ்சாந்தேதி முழுதும் யிவிடத்தில் யிருந்தேன்.

௬உ காலமே -௬- மணிக்குபுறப்பட்டு -௰௨- மணிக்குயிதுக்கு -அ- கோசுதூரமுள்ள தேருயென்கிறவூரைச்சேர்ந்தேன். வழிகறுத்தகளிமண்பூமியானாலும்அடியில்கல்பாறையிருக்கிறபடியால் மெய்வளவுமழைபெஞ்சாலும் கால்புதையாது வழிக்குரெண்டுபக்கமும் வெளியாயிருக்குது காடு யில்லை மழைகாலத்தில் வெகுவோடைகள்தாண்டவேணும் யேதலாபாதுக்கு யிப்புறம் சில தூரத்தில் வொருபெரிய வோடை வழியிலேயிருக்குது யேதலாபாதுக்கு நாலு கோசுதூரத்தில் சயினது யென்கிற வொருபெரியவூர் வெகுபஸ்தியாயிருக்குது. அந்

லூர் பேரிகனாயின்மேலே அழகாய் கல்வேலை செய்திருக்கிற வொரு விஷ்ணுகோவிலிருக்குது. அவ்விடத்தில் சகலசாமானுகளும் அகப்படும் அந்தவூரண்டை வொருபெரியவோடைதாண்டவேணும் பின்னும் சிலவூர்கள் வழியிலேயிருக்குது அதுகள் யிறங்கவசதியல்ல யிந்த தமோறு யென்கிற வூரண்டை பிசுகெங்காயென்கிற வொரு நதிதாண்டவேணும். மரந்துளைச்ச ரெண்டு சின்ன தோணிகளை வொண்ணாய்ச் சேர்த்துக்கட்டி ரெண்டு சவாரிகளும் ஆறு போயிகளும் வொருநடையில நதியைத்தாண்டலாச்சுது பரிவசனங்களும் சாமானுகளுந் தாண்டுகிறத்துக்கு ரெண்டு ரூபாய் தோணிக்காறனுக்கு யினாம் குடுத்தேன். கோதாவிரிமுதலான நதிகளில் யிருக்கிற தோணிக்காறருக்கு தபால்காறர்தாண்டுகிறத்துக்காக கும்பினியார்வருஷத்துக்கு ௰௨ ரூபாய் குடுக்கிறது போல யிந்த தோணிக்காறருக்கு மழைகாலம் நாலுமாசமும் மாசம் மூணுரூபாய் சம்பளங் குடுக்கிறார்கள். தோணிக்காறர் மனுஷியாளுக்கும் மாடுகளுக்கும் யிவ்வளவென்று வாங்கிறவருமானத்தில் வொருபங்கு நிசாமுக்கு குடுக்கிறார்கள். யிந்த தமோறுயென்கிறது சின்னவூர் யிவ்விடத்தில் பிறாம்மணாள்வீடுகள் யில்லை வொரு கடையிருக்குது பாட்டைசாரிகளுக்கு பிரயத்தினத்தின் பேரில் கொஞ்சம் சாமானுகள் அகப்படும். யிந்த பிறுந்தியங்களிலே மழைகாலத்தில் அடவைகமாய் நம்கூடாது அசங்கியமானசேத்துமேவே வூர்கள் யிருக்கிற படியால் நதிக்கரையில் கூடாரத்திலே யிறங்கினேன்.

௭௨-காலமே -௭- மணிக்குப்புறப்பட்டு ஒரு மணிக்கு யிருக்கு ௭-கோசுதூரமுள்ள காயறுயென்கிற வூராச் சேர்ந்தேன் வழி நேத்தியதினம்போலவே யிருக்குது அனேகம் சின்னவோடைகள் தாண்டவேணும் வொருகல் பாங்கான கணவாய் யேறியிறங்கவேணும் கணவாயின்மேலே முன்னும் பின்னும் காடுகள் யிருக்குது மேசலகெண்டி காட்டைப்போலவே யீகள் வுபத்திரவம் வுண்டு வழியில்யிருக்கிற டோனேகறுகாம் யென்கிறவூருடனே யிந்தகாடுசரி அப்புறம் சின்ன செடிகளாயிருக்குது பயவுபாதிகள் யில்லை யிந்தகாயாறு வூரண்டை வொரு பெரியவோடைதாண்டவேணும் யிது டவுஸியானவூர் நவாபுயிருக்கிற கஸ்பாஸ்தலம் சகலவஸ்துக்களும் அகப்படும் யிருவதுபிறாம்மணாள் வீடுயிருக்குது நான் பேஷ்காரவீட்டிலே யிறங்கினேன்.

௮௨-காலமே ௬ மணிக்குபுறப்பட்டு ௰௧-மணிக்குயிருக்கு ௫ கோசுதூரமுள்ளஞ்சியென்கிறவூராச்சேர்ந்தேன்வழியில் நாலு சின்னவூர்கள் யிருக்குதுகறுத்தகளிப்பாங்குபூமி அடியில்கல்பாறையுட்பேலேசேறுபா யிருக்குது காட்டிலேகல்பாங்கு யில்லை வழியில் சின்னவோடைகள் சிலது தாண்டவேணும் யிந்த வூர் வெகுபஸ்தியாயிருக்குது நதீதீரம் பூமிபயிரெல்லாம் செறுயில்லை யிவ்விடத்தில் பத்து தேவாலயம்யிருக்குது பிறாம்மணாள்வீடுகளும் சாவுகார்கொட்டிகளும் யிருக்குது வீடுகள் பெரிசாய்கட்டியிருக்குது அதிகாரஸ்தர்கள் யிருக்கிற

முதன்மையானஸ்தலம் செலவசதியுண்டு நான் பெரியவெங்கடேசுவர தேவாலயத்தில் யிறங்கினேன் சவாரிகள் வைக்கவும் போயிசன் சேவுசர் சாவடிக்காறர் முதலானபேர்கள் யிருக்கவும் வெகு சாவடிகளும் மளிகைகளும் பாசாறுகளும் மசீதுகளும் ஆசூர்காநாக்களும் யிருக்குது நாணயவாரி திணுசுகள் யிவிடத்தில் மாத்திக்கொள்ளலாம் நிசாம்பாரீட்டத்தில் யிருக்கும் அதிகாரஸ்தாளும் சமீன்தாறர்களும் வழக்கட்டடிக்கு நன்மையாய் டணைகட்டாத்திருப்பேல யிங்கிலீஷ்துரைகள் யிருந்தால் பயத்திருப்பே பணம்வருமென்று தவாங்கேட ஷிகார்செய்துலாளாதிலைசட்டண்டுருமையாய் நாஜூகாவின்பேரில தன்னுடைய அமுலதாறர்களுடனே யிருந்து வெகாரம் பார்க்குப்படி கலைகட்டிலா அனுப்பவச்சார் அவர்கள் யிருந்தத்தில் முகலாயி தாரணையாய் சனங்களே பேரிலே சொருவரிசைய்யக்கூடாமலயிருந்துது அதினுமேல அதிகாரஸ்தாளுக்கு வுபாயம் பெதாளுமல் செந்துலாளாவுக்கு தெரியட்டபடிக்கினத்தில மறுபடி அந்தகம்கட்டர்களோறு கூடெண்டு அவைபூட்டிசக்கொண்டான் அவர்களில சிலதுரைகளயிவ்படத்தில வழிகட்டிக்கொண்டு குடியிருக்கிறார்கள் யிங்கிலீஷ்காறர் நடப்பிச்ச அதிகாரத்தை மிகவும் நியாயம் அநியாயமென்று தெரிந்த சகல செனங்களும் மறுபடி யிங்கிலீஷ்காறர் யெப்போவருவார்களோ வென்றயிவரை ரனைமிகவும் பிரார்த்திச்சுக்கொண்டியிருக்கிறார்கள்.

சு-ஊ காலமே ௩ மணிக்குறப்பட்டு ௰-௨ மணிக்கு யிதுக்கு ௯ கோசதூரமுள்ள வீருடபேல்லி ஊராச்சேர்ந்தேன் வழி நேத்தியதினம்போலவேயிருக்குது பதண்டுக்கரும் வெரி காடுயில்லை வறநா வசிட்டா யென்று ரெண்டுபேரான வொருநதியைப் பெங்கங்கையைப்போலவே சேர்த்து கட்டப்பட்ட மரத்தோணிகளாலே தாண்டவேணும் சியல்ல்லென்கிறவூருக்கு யின்னம் சிலவூர்களுக்கும் வழியிலே யிருக்குது பறநாதிவராக்கும் அப்பிதுரையாதுடனே சேர்ந்த நதிக்கும் நடுவான தேசம் நாகபூருடைய ராச்சியம் யிந்தவூர் வெகு ஸ்தாயாயிருக்குது [illegible] சகல சாமானுகளும் அகப்படும் யிந்தவூர்முதல நாகபூருடைய ராச்சியமுழுவையும் சிலகாலம் யிங்கிலீஷ்காறருடைய ஆத்னத்திலே யிருந்தபடியாலே அம்போவரட்டபட்டதுரைகளுக்கு வேண்டிய சாமானுகள் சமுதாயிக்கும்படியாய் ஊர்கள்தோறும் ஸ்டோருஸ் ஜவான் யென்கிற பிலஉ ச்செயுகளாவைச்சிருந்தார்கள் அவர்கள் பிறுமானைக்கும் யிருக்கிறபடியால் வரட்டட்டமாத்துடரியான முசாபிரிகளுக்கு வேண்டிய பதார்த்தங்கள் யெல்லாம் யிங்கே கிடைக்குது காயாறு ஊர்முதல் தெலுங்குபாஷை அபுறூபம் பிறாமணாள் முதலான சகலசாதிகளும் மறாஷ்டசம்பேசுகிறார்கள் யிந்துஸ்தானியும் சகஜமாக ஷையாரி சர்வசெனசாதாரணமா யிருக்குது கிழக்கு தேசங்களிலே யிருந்து சற்ப்புகாலங்களில் வந்து நிலையாய் யிருந்துவிட்டவர்கள் மாத்திரம் யாதாவது ஊர்களிலே யிருந்

தால் அவர்கள் செலவுக்கு கொடுக்கிறார்கள் தென்தேசத்து பிராமணர் கோமுட்டி [illegible] யாத்திரைக்கு போயிருந்தால் [illegible] போஜனம் பண்ணுகிறார்கள் [illegible] அவர்கள் [illegible] பலகாரம் பண்ணுகிறார்கள் ரெண்டாவது போசனம் தென்தேசத்தில் பாதிவத்தாள் நியமம்பாராட்டாமல் மூணுதரம் போசனம்பண்ணுகிறது எவ்வளவு தாழ்வோ அவ்வளவு தாழ்வாயிருக்குது [illegible] பரிபாக்கம் சித்தார்த்தியெழுதிய படிக்கு யிவிடத்தில் பஞ்சாங்கங்களில் [illegible] யிருக்குது [illegible] யிருக்கிற சித்தாந்த அதுக்கு முன்னமே அடைந்தசாய் யெழுதியிருக்கிறதுபோல்யில்லை நான் பிராம்மணன் வீட்டில் யிறங்கினேன் யென் சவாரிகளை முசாபர்காணுக்கு [illegible] வைத்தேன்.

௰௨ உதயத்துக்குமுன் -௫ மணிக்குபுறப்பட்டு -௰௧- மணிக்கு யிதுக்கு-௮ கோசதூரமுள்ள நாகிரியென்கிற வூரைச்சேர்ந்தேன். வழிநேத்தியதினம்போலவேயிருக்குது மேற்சொல்லிய தோணிகளைப்போலே கொத்ததோணியினாலே வொருநதி தாண்டவேணும். சிக்கினியென்கிற வூர்வரைக்கும் வழி விசாலமாயிருக்குது [illegible] சேரல்ல சிக்கினியூர்முதல கருத்தகளிப்பாங்குழியாயும் மேடுபள்ளம அழுத்தமானதால் சேறுகள் சீவநமாய் வளர்ந்துபோகுது நடக்கிறதுக்கு [illegible] பள்ளங்களான மேட்டுகளுதாண்டவேணும் யிந்தவூர் கொஞ்சம் பட்டணமாயிருக்குது யிவ்விடத்தில [illegible]குவிடோபாயென்கிற தேவாலயம் கொஞ்சம் விஸ்தாரமான முகமண்டபங்களுடனே கட்டியிருக்குது பிராம்மணாள் வீடுகளும் முசாபர்காணாவும்யிருக்குது பாட்டசாரிகளுக்கு வேண்டியசாமானுகள் அகப்படும் யெதலாபாதுவூர்முதல யிந்தவூர்வரைக்கும் கருப்புவிளைகிறபூமி புஞ்சைதான்னியம் கொல்லைகளில் பயிரிடுகிறார்கள் வழிக்குரெண்டு பக்கமும் கொல்லைகளிலே மாடுகள் நுழையாமல் முள்ளுகள் வேலிபோட்டிருக்கிறதால் சேத்திலேபடுகிற பிரயாசையுடனே முள்ளும் கலந்திருக்குது நான்தேவாலயத்தில் யிறங்கினேன்.

௰௩ வ காலமே -௪- மணிக்கு புறப்பட்டு -௰௨- மணிக்கு யிதுக்கு -௭- கோசதூரமுள்ள மாண்டிகரம் யென்கிற வூரைச்சேர்ந்தேன் வழி சிக்கினியூர்முதல் நாகிரியூர்வரைக்கும் யிருந்ததுபோலவேயிருக்குது வழியில் நாகிரியூருக்கு யிப்புறம் -௫- கோசதூரத்தில் பீங்கன்காவியென்று ஷீகறுபோலே கொத்த பாருவூர்யிருக்குது அங்கே வன்னேயென்கிற நதியிருக்குது அதைமேற்சொல்லிய தோணியைப்போலே கொத்ததோணியினாலே தாண்டவேணும் அந்தவூரில் வர்த்தகாள் உப்புகொண்டுவந்து வைச்சுக்கொண்டு ஆறுகுசத்திலும் வெகுதூரம்வரைக்கும் பெட்டுப்படி ரூசிமோடியாய் விக்கிறார்கள் சாவுகாறர் கொட்டடிகள்யிருக்குது நாணய வாரிகள் மாற்புசெய்துகவ்வாள்ளாலாம் துணிகள்

முதலானசகலவஸ்துக்களும் மருந்துசாதிநுசுகளும் அகப்படும் யிந்தமாபன்ரிக ரய் களக்கிருமம் பாட்டைசாரிகளுக்கு வேண்டியசாமானுகள் அகப்படும் யிவி டத்தில் தேவாலயமும் சிலபிராம்மணாள் வீடுகளும் யிருக்குது வீடுகள் நிறைய யில்லை நயநலாய் யிந்த தேவாலயத்தில் கோகுல அஷ்டமிக்குச்ஈவம் நடந்தபடி யால் நான்வொருமறுவாடியினுடைய சின்னகடையில் யிறங்கினேன்.

௰௨௳ காலமே - ௬௨ மணிக்கு புறப்பட்டு - ௰ - மணிக்கு யிதுக்கு - ரு - கோசு தூரமுள்ள ... யென்கிறவூரைச்சேர்ந்தேன். வழிநேத்தியதினம்போலவே யி ருக்குது ... ளங்களில் யிறங்கி மேடுயேறவேண்டிய வாய்க்கால்கள் தாண்டவேணும் யிந்தவூர்கஸ்பாபேட்டைஸ்தலம் சகல வஸ்துக்களும் அகப்ப டும் ... யிருக்குது நான் ... யி றங்கினேன் யிந்தபிறாந்தியங்களில் களக்கிருமமான யிடங்களிலே வாரத்துக்கு வொருதிரம் சந்தை கூடுகிறது அப்போசுத்தல் யிருக்கிற வூர்களிலேயிருந்து கறிகாய் வெத்திலை முதலான சகலவஸ்துக்களும் கொண்டுவருகிறார்கள் யின்ற யதினம் யிந்தவூருக்கும் கொண்டுவந்தார்கள் சகலவஸ்துக்களும் நயமாய்யெல் லாருக்கும் அகப்படுது.

௰௩௳ காலமே - ௬௨ - மணிக்கு புறப்பட்டு - ௰௨ - மணிக்கு யிதுக்கு - அ - கோசுதூரமுள்ள கூம்காம் யென்கிறவூரைச்சேர்ந்தேன். வழிநேத்தியதினம் போலவேயிருக்குது வழியில் நாலுகோசுதூரத்தில் டாகுலுகாம் யென்கிறவூர் யிருக்குது அதுவரைக்கும் வழிக்குரெண்டுபக்கமும் சின்னசெடிகள் வுள்ள காடு ... யிருக்குது ... அந்தவூர்கள் யிறங்க வசதியான நல்ல டாகுலுகாம் வூரண்டை நதியைப்போலே யிருக்கிற வொருவோடை தாண்ட வேணும் அயிசருபாது முதல் நல்ல வீடு கட்டுகிறவர்கள் மண் மெத்தை வொரு வீட்டுக்காவது கூடத்துக்காவது போட்டு அதின் மேலே வோட்டுக் கூரையால் வொருகொட்டடி யேற்படுத்தி யேறுகிறத்துக்கு வொருயேணியாவது டெரி ... கட்டுகிறார்கள் ... சாதாரணமாய் வோட்டுபி ல்லைகளாலேயும் விழல்களாலேயும் கட்டியிருக்குது மேலெழுதியயெதலாடா து வூர்வரைக்கும் வீடுகளுக்கு போட்டிருக்கப்பட்ட தட்டோடுகள் நம்மிட தேசத்தில் கால்வாய்க்கு வைக்கிறஆனைக்கால்யென்கிற மண் தோணிகளைப்போ லேயிருக்குது டாகுலுகாடு வூர்முதல் தென்தேசத்தில் மெத்தைகளும் தட்டிபோ டுகிற சதிரவோடுமாதிரியாய் நடுவில் கொஞ்சம்வளைவு வுண்டாயிருக்குது யெ தலாடாது வூர்முதல் வூர்கள்தோறும் வொருநதியைப் போலேகொத்த வோ டைகளுடைய ஆதரவிலே பயிரிடுகிறார்கள் யேரிகள்விஸ்தாரமில்லையிந்தவோ டைகள் நல்ல சவுக்கியமாயிருக்குது டாகுலுகாடுவூர்முதல் கல்பாங்குபூமி கா டுகள் யில்லை வழிக்குரெண்டுபக்கமும் பூமிசதிரமாயிருக்குதுயிந்தகூம்காம்யெ ன்கிறவூர் ... யென்கிற ... க்கு ...

டெண்பிள்ளைக்கு சாகிரா யிருக்குறு யிந்தவூராரும் யிவிடத்திய அதிகாரஸ்தா ளும்நாகபூர் ஷிகருக்கு சமீபமான யிடத்திலே யிருக்கிற படியால் புறத்தியா ளை மதிக்காமல் அகங்கார முள்ளவர்களா யிருக்கிறார்கள் பஸ்திவூராகையால் சகலவஸ்துக்களும் கடைகளில் அகப்படும் வூருக்குநடுவே வொருவோடை பிற வாகமாய் வோடிக்கொண்டு யிருக்குது யிந்தசெலம் வெகு தெளிவா யிருக்குது யிவிடத்தில் தேவாலயமும் தர்மசாலை யென்கிற சாவடியும் பிறும்மணாள்வீடுக ளும்யிருக்குது தர்மசாலை யென்கிறது வொரு தாவாரமாய் வீதிக்கு யெதிரே கட்டி யிருக்குது யிந்த தேசத்து முசாபரிகள் பிறும்மணாளாளும் திறவிடதேசத்தும் பாராட்டுகிறதில்லை அவாள்யிந்தசாவடிகளில் யிறங்கிய நிறையாள் போ கிறவாள் பார்க்கும்படியாய் சமயல்செய்து போசனம் பண்ணுகிறார்கள் சூத்தி ருளை தங்களுக்கு யெதிரே வுள்கார வைச்சுக் கொண்டு தங்களுக்கு சரியாய் வொருபந்தியில் சூத்திருளுக்கு சாதம்பரிமாறி அவர்கள் பார்க்கும்படியாயும் அவர்களுடனே பேசிக்கொண்டும் போசனம்பண்ணுகிறார்கள் யிந்த ஆசாரங்க ள்யெல்லாம் (மனயேவ மனுஷியாணும் காறணம் பந்த மோக்ஷயோ) யென் கிற நியாயத்தால் பிறப்பு யிறப்புகளை வுண்டாக்குதாகையால் பொல்லாங்கல்ல ஆகிலும் நன்மைதோணுமலும் பிறும்மணாள் வீடுகளில் கொஞ்சயிடமா யிருக்கி றத்தாலும் அவர்களுடைய ஆசாரங்கள் சூத்திருளைக் கொண்டு செலம் அழைப் பிச்சுக்கொள்ளுகிறதுமாயிருக்கிறபடியாலும் நான் வொருவோடையின்கரை யோரத்தில் கூடாரம் போடுவிச்சு அதில்யிறங்கினேன்.

மசஉ காலமே -எ- மணிக்கு புறப்பட்டு -ம- மணிக்கு யிதுக்கு -ச- கோசு தூரமுள்ள நாகபூர் ஷிகரைச்சேர்ந்தேன் வழி வுறுதியான கறுத்தகளிப்பாங் குபூமி மண்ணுக்கு யெட்டிணமட்டுக்கும் பூமி சதிரமாயிருக்குது யிந்தஷிகரு க்குமுன்னே நாகலாறு யென்கிற வொரு பெரிய வோடை தாண்டவேணும் யிந்தஷகரண்டை சீதாபுலு டியென்று வொரு தீர்த்தப்பிறதேசம் யிருக்குது யிந்த கோட்டையண்டைதான் நாகபூர் ருசாவுக்கும் கும்பினியாருக்கும் யிது வரையில் சண்டைகள் நடந்தது யிவிடத்தில் ரெசிடெண்டு வீடுகளும் தோட் டங்களும்யிருக்குது யிவைச்சுத்திலும் யிங்கிலீஷ்காறர் வீடுகளும் ஆர்சுனல் யென்கிற ஆயுதசாலையும் தபாலாபீசு முதலானதுகளும் கடைகளும் தோட்ட ங்களும் யிருக்குது [illegible] சாதியார் பொம்பாயில் யிருந்து சீமைவஸ்துக்கள் கொண்டுவந்து யிங்கிலீஷ்காறருக்குத் தகுந்த ஷாப்புகள் வைச்சுக்கொண்டு யிருக்கிறார்கள் யிங்கிலீஷ்காறர் வீடுகளுக்கு விழலக்கூரை போட்டிருக்குது அவைமுதலானது [illegible] வெகு அதிசயமாயும் அழகாயும்யிருக்குது யிவிடத் தில் [illegible] கள் வீடுகள்யிருக்குது யிவிடத்தில் தபாலாபீசு [illegible] பட்டணம்குடியான வீராசாமி முதலியா ரென்கிறவ ரை [illegible] யாலே மோடோடே யெல்லாமிகவும்வசதியான வொரு

தோட்டத்துடன் பக்கங்கள்சில் பிராமணன் யிந்த சேதில் சமாரு மூவாயிரம் வீடுகளிருக்கும் அதில் வெகுசின்ன வீடுகள் டாக்கவக்கு லக்ஷமிசாமுப் வாச யோக்கியமுமாயில்லை வெகுபாசாணங்களிருக்குது சகல போசனவஸ்துக்களும் விஸ்தாரம் தேசவஸ்திரங்களும் பழவகைகளும் அகப்படும் சமோர் சிச்சிலி காலத்தில் நல்லதாய் கிடைக்கும் சீமை அத்திப்பழமும் சீமைப் பன்னீர்புஷ்பம் விஸ்தாரம் [illegible] அரிதாயிருக்கிறார்கள் யிந்த தேசத்தில் சாதிபுஷ்பம் முல்லை மல்லிகை அகப்படாது ஸ்ரீரங்க கஸ்தூரிப் பட்டை டுஷ்டம் சென்னபட்டணம்விட்டபிற்பாடு கண்ணிலே கண்டதில்லை நாகபூர் முதல் துட்டப் கிடையாது யீச்சவோலைகளை கட்டுகள்கட்டி பூமியை விளக்கிறார்கள் தையலிலை மூங்கில்பத்தையாலும் சோளத்தட்டாலும் தைக்கவேணும் டடப்பையிட்டதுமுதல் அம்மி குழவிகள் கையாளுகிறதில்லை வரலிலே போட்டுயிடிக்கவேணும் யிதரதேசஸ்தாள் பிறயத்தினம்செய்து கல்லமும் குழவியும் சம்பாதிச்சு வேலைகளை முடிச்சுகொள்ளவேணும் யிவிடத்தியார் குதுவுள்ளவர்களானாலும் அயிதரூபாத்திலே யிருக்கிறவர்களைப்போலே டேக்ககுமுன் ஆயுதங்கள் பெடுக்கிறவர்களல்ல ஸ்ரீபுருஷாள் ட்ஷமும் ரூடமும் வுள்ளவர்கள் யிந்த வேதநில் வீதிகள் நெருக்கமாயிருக்குது மிகவும் கறுத்தகளிப்பாங்குபூமி மழை காலத்திலே யிவிடத்தில் வழக்கப்படாதவர்களுக்கு யிந்தசந்துகளில் பூமியில் அடிவைக்க அசங்கியமாய் தோணும் யிப்போ யிவிடத்திலே யிருக்கிற கொத்தவால் குலுக்கன் நடுவீதியில் விழுந்த வஸ்துக்களை டோட்டவன் வந்து தேடியெடுக்கிறவனைக்கும் அவிடத்திலேயே யிருக்கும்படியான அவ்வளவு ஆக்கினை செலுத்திவருகிறான் சந்தைக்கு வொரு டாணுயிருக்குது அதிலே யிந்தரூசாக்கு நிறுத்தியாகுதென்று தோணுது யிவிடத்தில் மறவாடி சாதியாரும் கோசாயிகளும் சொட்டடிகள் வைச்சுக்கொண்டு சாவுகார்வேலைகள் செய்கிறார்கள் செல்லுமான ரத்தினவர்த்தகங்கள் நடக்குது ரூசா அரமனைக்குள் வெ[illegible]ண்டு தேவாலயம் அழகாய்கட்டிவைச்சு பூசைநடந்துவருது அதுதவிர மத்தயிடங்களிலேயெங்கும் தேவாலயங்கள்யில்லை ஷிகர்சுத்திலும் சாரமான பூமிகளும் வெகுதோட்டங்களும் யிருக்குது வாழை விஸ்தாரமாய் வைச்சிருக்குது யிவிடத்திலிருக்கிற சுசேந்தத்தில் தினம் நூறுபேர் பிராமணர்களுக்கு யிந்தரூசா அன்னதானம் பண்ணுகிறார் வேதபாடசாலைகள் யில்லை வேதம் கேழ்க்கவேணுமானால் சம்பாதித்தியத்துக்காக யிவிடத்தில் வந்திருக்கிற மத்தியதேசத்து பிராமணாளாலே கேழ்க்கலாம் யிந்ததேசத்தார் யிகபரசாதிக்க அரிப்பசனை செய்விறதும் செய்விக்கிறதுமா யிருக்கிறார்கள் அயிதரூபாது முதல் யிருக்கிற தேவாலயங்களுக்கெல்லாம் வொரு கெர்ப்பக்கிரகமும் முகமண்டபமும் வாழைப்பூப்பாலே வெகு ஸ்தூபியும் செய்திருக்குது யிந்தஷகரில் நான் பிறவேசிக்கும்போது யிவிடத்தில் ஸ்ரீகிருஷ்ண தவுரூத்திரிவுச்சவம் வெகுவிபவமாய் நடக்க

சோறும் நடப்பிச்சார்கள். உச்சவமான உடனேதென்தேசத்தில் தைமாசத்தி லே மாட்டுப்பொங்கல்தினம் நடக்கிறதுபோல யிவ்விடத்திலும் மாட்டுக்கு பொங்கல்முதலாயது வைச்சு மனுஷ்யாள் வொருவரை வொருவர் மரியாதை பண்ணிக்கொள்ளுகிறார்கள் கும்பினியார் யிவ்விடத்திய ராச்சிய விசாரணை நியாயவிசாரணைகளில் வெவ்வேறுவும் சம்மந்தப்பட்டவில்லை. யிந்த நாகபூர் ராச்சியம் பூர்வாபூர்வீகமாய் கொண்ட ராசாக்களுக்கு அவாள் காடுகளை பலம் செய்து மலைதுர்க்கங்களை ஆதாரமாக்கிக்கொண்டு மராட்டெல் சாளைக்கட்டயிவிடத்துக்கு வரவொட்டாமல் சொந்தமாய் பண்ணிக்கொண்டு ம்ஹுபுகள் ... டபெல ... சகலதேசத்திலும் ராச்சியத்தை ஆண்டுக்கொண்டு யிருந்தார்கள் சுமார் யிறனூறு வருஷத்துக்கு முன்னே புதகோசியென்கிறவருடைய பெரியவாள் ஷாகுராசாவுக்கு தாயாதிகளானதினால் புனாஸ்ரீமந்தருக்கு ஷாகுராசாவுடைய ராச்சியத்தை தானம் நடுத்து அந்த தாயாதிகளையும் கொண்ட ராச்சியத்தையும் சாதிச்ச ஸ்ரீமந்தருடைய ஆக்கினைக்கு வுள்ளாகச் செய்தார்கள். புத்தோசியினுடைய பெரியவாள் நாகபூர் சமீபபூமியை சாதிச்சார்கள் பிற்பாடு க்ஷாத்திர தர்மப்பிறகாரம் நாலுக்குநாள் கொண்டராசாக்களை முழுதிலும்சாதிச்சு யிந்தநாகபூரை ராசதானியாய்செய்து ராச்சீகம் செய்துகொண்டுவந்தார்கள். ஷாகுராசவினுடைய மத்தொரு திசையான தாயாதிகள் தெற்குராச்சியத்தில் பிறவேசிச்சு தஞ்சாவூர் சீமையைசெயிச்சு ஆண்டுகொண்டுவந்தார்கள் அந்த ஷாகுராசாவுடைய வம்சத்தை போசலவம்சமென்று சொல்லப்படும். சாதாருவென்கிறவிசர் ஷாகுராசாவுக்கு ராசதானியாயிருந்தது அந்த ஷாகுராசாவை டில்லி பாதுஷா குமாரத்தி மோகிச்சு விவாகம்செய்ய யிருக்கும்போது பாதுஷா ஷாகுராசாவை கொன்னுபோட்டான் அவர்குமாரனான சின்ன ஷாகுராசாவை பாதுஷா குமாரத்தி வளர்த்து அவனை அந்த சாதாருவுக்கு பூர்வத்தைவிட வெகுபிறபலமாய் ராசாவாகச்செய்விச்சாள் பிற்பாடு அவருடையவம்சஸ்தருக்கு புத்திரசந்ததியில்லாத்தினாலே தங்களை அடுத்திருந்த பிறாம்மணனான ஸ்ரீமந்தனுக்கு ராச்சியத்தை தத்தம்பண்ணி தாயாதிகளையும் கொண்டராச்சியத்தையும்மேலெழுதியபடி செயிச்சு தான் தானம்குடுத்த பிறாம்மணனுடைய ஆக்கினைக்குவுள்ப்பட்டு நடக்கும்படி செய்தார்கள் அந்த பிறாம்மணன் தான் ஸ்ரீமந்தனென்கிறவர் புத்தோசிராச்சியம் ஆளும்போது வெகுபிறபலமான பாக்கியத்தையடைஞ்சு கீர்த்திவானுனர் அந்த புத்தோசியினுடைய தகப்பனான றகோசியென்கிறவர் பின்னும் தன்னுடைய சிலபுத்திரருக்கு மறுதேசதனத பங்கிட்டுக்குடுத்தார் புத்தோசி நாகபூரையும் பின்னொருபிள்ளை சாந்தாவென்கிற வொருபட்டணத்தையும் மத்தவெண்டுபேர் றத்தினபூரையும் நத்திக்கிராமத்தையும் ராசதானிகளாய் செய்து ராச்சியத்தை ஆண்டுகொண்டு வந்தார்கள் புத்தோசிராஜ்முதில் யிங்

லிஷ்காறர் சினேகமார்க்கமாய் யிந்த ராச்சியத்தில் பிறவேசிச்சு அவருடையபுத்திரனான நகோசிமுதலானவர்களுடனே சண்டை பண்ணிக்கொண்டு யிவிடத்தில் நிலையாயிருக்கிறார்கள் பின்பு தனியாய் ராசீகஞ்செய்துக்கொண்டுவந்த வம்சஸ்தாளில் சிலபேர் யிறந்துபோய் நின்னவர்களும் வொருவருக்கொருவர் விசுவாசகாதகத்தால் மடிஞ்சுபோய் ராச்சியமெல்லாம் வொருவகையாய் கடசியில் அப்புசாய்பு யென்கிறவருடைய ஆதீனமாச்சுது அவர் யிவிடத்தில் சேர்ந்திருக்கிற யிங்கிலீஷ்காறனை வோட்டிவிட யெத்தனஞ்செய்து அதினாலே தேசத்தைவிட்டு யிப்போ சாகாதபிணம்போலே யிருக்கிறார் யிங்கிலீஷ்காறர் நகோஜியினுடைய பேரப்பிள்ளைக்கு பட்டம்கட்டி வயசுவருகிறவரைக்கும் தாங்களே ராச்சியம் விசாரிச்சுக்கொண்டிருந்து யிப்போ சிலமாசத்துக்குமுன்னே அந்தசிறுபிள்ளை ஆதீனமாய் ராச்சியத்தை சிலவுடம்படிக்கைகளின் பேரில் குடுத்து அந்தபிள்ளைக்கு நகோசியென்று பேரிட்டார்கள் அந்தவுடம்படிக்கைப்பிறகாரம் கும்பினியாருக்கு வருஷத்துக்கு வொன்பதுலக்ஷம் ரூபாய் கட்டவேணும் சிலகாலத்துக்குமுன்னே கிழக்கே கடகம் தெற்கே வறதாநதி மேற்கே புனா வடக்கே ஐபல்பூர் யிதுகள்வரைக்கும் யிவாள்ராச்சியமாயிருந்தது நகோசினுள்முதல் கலகப்பட்டபோதெல்லாம் கிழக்கேயும் வடக்கேயும் கொஞ்சங்கொஞ்சமாய் கும்பினியார் கிறகிச்சுக்கொண்டார்கள் யிப்போ நாகபூறுக்குவடக்கே பதினஞ்சுகோசுக்கு அப்பால் கும்பினியார் அதிகாரம் நடக்குது ருமடெங்கேவூர்வரைக்கும் நாகபூர்ராச்சியம் யிந்ததேசமெல்லாம் மருட்டியர்விஸ்தாரம் யிந்த நாகபூர்ராசா மருட்டிசாதி யிவருக்கு தஞ்சாவூர்ராசா பந்து யிந்தராசாவுடைய வம்சஸ்தாள் செளவயாயிருக்கும்போது தேவப்பிராம்மணபூசை வெகுசாய் செய்துகொண்டு வந்தார்கள் யிப்போ கிலக்டர்கள் அனுப்புகிற தாசில்தாறர்கள் ராச்சியதந்திறங்கள் செய்கிறார்கள் கும்பினியார் ராசாவுக்கு ராச்சியம் குடுத்திருக்கிறத்தில் குடிகள் யெவ்வளவும் சந்தோஷம் அடையயில்லை ராசாவின்கீழே வருஷத்துக்கு யிவ்வளவுயென்று குடுக்கிற அமீன்தாறர்கள் சிலபேர் பிறபலாளாயிருக்கிறார்கள் நாகபூறுக்கு ஆறுகோசுதூரத்தில் காமிட்டியென்று வொருவூர்யிருக்குது அங்கே யிங்கிலீஷ்காறர் அஞ்சுபடாளங்களையும் அதுக்குத்தகுந்த காரியஸ்தாளையும் வைச்சிருக்கிறார்கள் அந்தவூர் வெகுபஸ்தியாயிருக்குது அவிடத்தில் மிகவும் களிப்பாங்காய் கறுத்த பூமியாயிருக்குது அங்கேயிருக்கிறதண்டில் சகலகணக்குமுதலானதுகளும் யிங்கிலீஷ் பாஷையில் யெழுதவேண்டி யிருக்கிறத்தால் மத்தியதேசஸ்தாளான ஆர்க்காடு முதலியார் முதலான அனேகம்பேர் அங்கே யிருக்கிறார்கள் அவாள் அந்த தேசஸ்தரைவிட அதிகமாய்சொந்தேசஸ்தரிடத்தில் பிறீதியும் அபிமானமும் கட்டுப்பாடான சினேகமுமா யிருக்கிறார்கள் யிங்கிலீஷ்காறர் யிதுவரைக்கும் யிந்ததேசங்களில் சாதிபகையில்லாமல் வொருவர்க்கொருவர் வுபகாரம்

செய்யும்படியான யிஷ்டத்துடனேயிருக்கிறது அவாள் தேசத்தின்வழக்கமென்று நினைக்கிறேன் யிந்த காமிட்டி அண்டில் பிறவேசிச்சபின்பு பரதேசத்தில் போயிருக்கிறவாளுக்கு சொதேசஸ்தரைக் கண்டால் காணுதபதார்த்தம் கண்டதுபோல அபுரூபமாகையால் மிகவும் பிறீதி விசுவாசம் வுண்டாகுமென்று நிச்சயிக்கிறேன் அயிசருடாது நாகபூர் சால்ற மைசூற் யிதுகளில்யிப்போ தமிழர்செய்கிற வுத்தியோகங்களிலே கம்மிசேரியாட்டு வுத்தியோகம் நல்லதாய்காணுது காமிட்டியில்பங்காளாகண்டு வெகுநாளாயிருக்கிறத்தால் யாறக்கிசு வாராவதி முதலானதுகள் விஸ்தாரம்கட்டியிருக்குது யிந்தவேலைகளுக்கு சென்ன பட்டணம் கெவர்னர் மெண்டார் வுத்திரவாகிறது அரிது டங்காளா கெவர்னர்மெண்டார் தாராளமாய் சம்மதிக்கிறார்கள் சீதாபுலுடி முதல் காமிட்டி தண்டுவரைக்கும் குதிரைவண்டிகள் போகும்படியாய் சாலைபோட்டு நடுவேயிருக்கிறவோடைகளுக்கு வாராவதிகள் கட்டியிருக்கிறார்கள் அந்த வழிக்கு றெண்டு பக்கமும் வெளியாயிருக்குது சீதாபுலுடியில் மலைவோரத்திலும் காமிட்டியில் நதிவோரத்திலும் பருக்காங்கல்லுகள் கலந்தயிடத்தில் யிங்கிலிஷ்காறர் வீடுகளும் தோட்டங்களும் கட்டியிருக்குது காமிட்டியில் கண்டோன்மெண்டு யென்கிறதண்டில் டாரிஷ்காறருடைய யிங்கிலிஷ்ஷாபுகள் யிருந்தும் யூரில் பாசாறுகள் பஸ்தியாயிருந்தும் அயிசருடாத்தில் யிருக்கிற யிங்கிலிஷ்தண்டிலுள்ளடங்களையில் நாற்றிலொருபங்காவது யில்லை (சுயம்புரசாகுபயம்மந்திரி) யென்கிற நியாயமாய் யிந்சருச்சியத்துக்கும் தண்டுக்கும் யிங்கிலிஷ்காறரே யிதுவரைக்கும் யெசமானர்களாயிருந்தபடியால் அவாளுடைய ஆதரணை அனுசரிச்சு தண்டிலே செனங்கள் சேரவேண்டிய அகத்தியம் யிதுவரைக்கும் யில்லாமலிருந்தது யெழுத்தால் கவைக்காகமாட்டேனென்றும் கொல்லையில் பறண்மேலே ஆயலோட்டுகிற முட்டவனைப்போலவும் அயிதருபாத்து தவாபு யிதுவரைக்கும் தன்கனத்தை காப்பாத்திக்கொண்டு யிருக்கிறத்தாலும் நாகபூர்ராஜாஸ்தானம்பண்ணி குளிர்பயத்தை போக்கடிச்சுக்கொண்டபடியாலும் யிங்கிலிஷ்காறருடைய அதப்பும் செல்வமும் அயிதருடாது தேசத்தில் விசேஷமாயிருக்கிறதுபோல யிவிடத்திலே யில்லை பிறபஞ்சத்தில் வொருதன்மையுடனே வொருமைக்குதல் சேர்ந்தால்தான் சவுக்கியத்துக்கு யேதுவென்று தோணுது நாகபூர்திசைபெண்டாகிய மேஸ்தர் கிறீம் துரையுடனே பிறபஞ்சத்தினுடைய அ ாவசம்மந்தமான சிலவார்த்தைகள்பேசும்போது பிறபஞ்சம் புண்ணிய ாவம் நிர்குணப்பிறம்ம சம்மந்தமான செய்கையென்றும் ாவம் சஙகல்பத்துவாரு சிறுஷ்டியான மாயாசம்பந்தமான செய்கையென்றும் யிந்த றெண்டும் கலந்து பிறபஞ்சநிர்மாணம் செய்யப்பட்டுதாகையால் யெந்த நல்லவஸ்துக்களிலும் கெடுதல் கலந்துயிருக்குமென்றும் அதுக்குதிஷ்டாந்திரம் யிந்துக்கள் மூடாள் பாஷாண் தெய்வவிஷயமாய் பக்தியுண்டாகிறத்துக்கு பிம்பத்தி

ளிடத்திலே தெய்வத்தன்மையை வுண்டென்னிக்கொள்ளுகிறதனாலும் ஞானம் வுண்டானகாலத்திலும் அந்த பயிக்கை நீக்கப்பட்டு மனுஷ்யசோடிகளை முழுக்கப்படுத்துது வென்றும் அதுக்குவிரோதமாய் விலாயத் தென்கிறசீமை கிறிஸ்துமதஸ்தாள் யீசுவை டொனாடதை ஆதியிலேயென்றும் நிரந்தரமோவா ருவனென்றும் போதிக்கறினச்சபடியால் மூடாள் பாலர்கள் யீசுவரன் யென்கிற கிபானமேயில்லாமல் முழுகிட்டுபோகிறார்கள் யென்றும் ஸ்ரீகளுக்கு ரெண்டாம்விவாகம் யித்தாக்கள்செய்யாததினாலே யிளம்பெண்சாதிகள் கஷ்டப்படுகிறார்கள்யென்றும் அதுக்குயீடாக யிங்கிலீஷ்காறர் ஸ்ரீகளுக்கு ரெண்டாம் விவாகத்துக்கு இலவுகுடுக்கிறபடியால் ஸ்ரீகளுக்கு சபலம் சகசமாயிருக்கிறதனால்செரிந்த புருஷனிடத்தில் பயபக்திகுறைந்து அவன் மரணம் அடையச்செய்து வேறொருபுருஷனை விவாகம் பண்ணுகிறார்கள் யென்றும் வொரு நன்மை நினைச்சால் வொருகெடுதல் பிறபஞ்ச சுபாவத்தினாலே அந்தநன்மையிலேயே வர்பத்தியாகுதென்றும் யிப்பேர்ப்பட்ட பேதங்களினாலே கெடுதல்கலவாத நன்மையானவேலை பிறபஞ்சத்திலே யில்லையென்கிறதாய் நிச்சயம்செய்தோம் மேலும்அனேகமான சிருஷ்டியை பரப்பிறம்மத்தினுடைய திருவிளையாட்டுக்காகசெய்ததாகையால் அந்தந்ததேகங்கள்தோறும் குணங்கள்வெவ்வேறாயிருக்குது குணபேதங்கள் மனசினாலேயும் மனசு புத்தியினாலேயும் வுண்டாகுது காஷ்டத்தில் அக்கினி பிறவேசமானதுபோல புத்தியில் பரமாத்துமாபிறவேசிச்சு பிறதிபலிச்சுயிருக்கிறார் காஷ்டகுண பேதங்கள் அனேகமானது போல புத்தி பேதங்களும் அனேகமா யிருக்குது அனேக மண்டலமுள்ள நிச்சியம் வொரு மனுஷியனுடைய ஆதீனமா யிருக்கிறதைவிட வொவ்வொருமண்டலத்துக்கு வொவ்வொருறாசாயிருந்தால்புத்திபேதங்களாலே வொருவன் யுக்திக்கு வொருவன் புத்தியினாலே யெதிரியினுடைய யுக்தியைகாரணகுருபோதையாய் வைச்சுக்கொண்டு தான்மேலான யுக்தியை வுண்டென்னுவான் மேலும்தாய்தகப்பன்வுண்டானபிள்ளைகள்தாய் கோபிச்சால்தகப்பன் யிடத்திலும் தகப்பன் கோபம்பண்ணால் தாயிடத்திலும் போகிறது போலவும் அயிகறூபாத்திலேயிருக்கிறபிறசைகள் வொருபிறபுவை விட்டு யின்னொருபிறபுவின் யிடத்துக்கு போகிறதுபோலவும் ஆனந்தப்பட்டுக்கொண்டு சுகப்படலாமென்றுதோணுது யீசுவரன் அயிசுவரியம் குடுத்தகாலங்களில் மாத்திரம் அறிஞ்சு குடுத்துக்கொண்டுவருகிறார் நாகபூர் ராச்சியபத்துக்கு சென்னபட்டணம்தண்டெருகிறத்துக்கு முன்னே புளியின்னத்துக்கு வுதவுமென்று தெரியாதாயிந்த தேசஸ்தாள் தயிராவது மோராவது கொழம்பிடாமல் சாப்பிடுகிறதில்லை தென்தேசதில் சூத்திரன் றாத்திரியில் மோர்தயிர்சாப்பிட்டால் சலுப்புசெய்யுமென்று பயப்படுகிறதுபோல பயப்படுகிறார்கள் மறாவஸ்துக்கள் சரீரத்துக்கு வொத்துப்போகிறவளாக்கும்பெதுவும் அனுகூலப்படாது நாய்கள்றாத்திரியும்

யகளும் மோர் தயிர் க்ஷீராரம் அகப்படுகிறத்தால் அதை சாப்பிட்டத்தில் யா
தொருவிரோதமும் செய்யவில்லை. அதுக்குதிஷ்டாந்திரங்காட்டுமெனவியான்
விஷசெந்துக்களாலே பயமில்லாமலிருக்க மனுஷியனை கொல்லத்தக்கவிஷத்
தையும் யெட்டிக் கொட்டையும் சாப்பிட்டு சீரணம் செய்து கொள்ளுகிறது
போல தேசாசாரவழக்கமான ஆகாரங்களைவிடுகிறது நல்லதல்லவென்றுந்தோ
ணுது. யிந்ததேசத்தாருடைய ஆசாரம் தென்தேசத்தாருக்கு பழிப்பாயிருந்
தாலும் சாஸ்திர சம்மதமானதுதான் ஆசாரம். போசனம். அலங்காரம் முத
லானதுகள் தேசங்களுக்குத்தகுந்ததாய் பெரியயாள் ஆகமப்படிக்கே யேற்ப
டுத்தியிருக்கிறார்கள். அதையறியாமல்வொருதேசஸ்தர்மத்தொருதேசஸ்தனை
விருதாவாய் நிந்திக்கிறார்கள். அதுக்கு திஷ்டாந்திரம் யிந்ததேசத்தில் போச
னத்துக்கு திருஷ்டிதோஷமும் செலத்துக்கு பரிசதோஷமும் யில்லையென்று
நடக்கிறத்தில்யென்னவிரோதம் பிராம்மணாள் பரிவேஷிக்ஷணம் யென்கிற நர்வி
ன்றவுகிறது பார்வைதோஷ நிவர்த்திக்கு அல்லவா பார்வைதோஷம் பாராட்டுமெ
னவில ஆபஸ்தம்ப சூத்திரம்யென்கிற சாஸ்திரம் விருதாவாகுது ஆனால் முன்
னிலே சூத்திர திருஷ்டி கூடாதுயென்று வொருவசனம்பிறத்திருக்கிறத்தால்
அதைகண்டபின்பு ஆபஸ்தம்பாள் சூத்திரத்தாலே பரிவேஷிக்ஷணப்பிரக
ரணம் வுண்டாக்கினாலும் பரிவேஷிக்ஷணமும் செய்து சூத்திர திருஷ்டியு மி
ல்லாமல் தேசம் ஆளுகிற ராசா ஆதரணையால் மத்தியதேசத்துபிராம்மணாள் நட
ப்பிச்சுக்கொண்டுவருகிறார்கள். பின்னொருதிஷ்டாந்திரம் பிறுதிவு. அப்பு. தேயு.
வாயுவு. ஆகாசம். யென்கிற அஞ்சுபூதங்களும் பிறம்மாண்டத்துக்கு பஞ்சமகா
பூதங்களாயிருக்க யெல்லாத்தையும் பரிசுத்தம்செய்கிறசெலத்துக்குபரிசதோ
ஷிப்பேது அந்தசெலத்தையே வொருகுளத்தில் சகலசாதிகளும் நாலுதுறை
யிலும் யேககாலத்தில் ஸ்தானம்செய்யயில்லையா கொஞ்ச செலத்துக்கு பரிச
தோஷம் பாராட்டவேணுமென்று சொல்லும்போது அப்புக்கு சமானபூதமா
ன அக்கினிக்கும் அந்ததோஷமே சொல்லலாமேகொஞ்ச அக்கினிக்குமாத்திரம்
தோஷமில்லையென்று சொல்லுகிற தென்னு யிவிடத்திய ஆசாரத்துக்கு பதி
லாய் மத்தியதிராவிடதேசத்தில் பழயதுசாப்பிட்டால் மறுபடி வுபநயனமாக
வேணுமென்றும் புளியுடனே முளகுகலந்து சமயல்பண்ணால் கள்ளுக்கு சமா
னமென்றும் சாஸ்திரமிருக்க அந்தரெண்டும் யில்லாவிட்டால் வுஷ்ணவாயுவுபூ
மியில் வாசம்பண்ணுகிறவாள் யிறந்துபோவார்களென்று அவதாரபுருஷரான
அப்பய தீக்ஷிதர் அதுகளை சாப்பிடலாமென்று அனுக்கிரகம்பண்ண பலத்தா
லே தென்தேசத்தார் சாப்பிடுகிறார்களா யில்லையா வடதேசத்தாருக்கு அதுக
ள்வேண்டியில்லாத்தால் நிஷேதிச்சியிருக்கிறார்கள். கர்மத்தினாலே ஞானம் சம்
பாதிக்க வேணுமாகையால் கர்மக்கிறிகைகள் ஆசாரமில்லாமல் நிறவேறாதா
னபடியால் வெகுவிதமான ஆசாரங்களை அந்தந்த தேசங்களுக்கு அனுகூலமா

ப்பெரியவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட ஆசாரங்கள் சாஸ்திரவசனங்களாலேயுண்டாகிறதும் அழிகிறதுமாயிருக்குது. இதுகளையெல்லாம்முன்னோர்கள் அனுசரிச்சு வந்தபடியால் அந்த வழக்கங்களை பாராட்டலாச்சுது. சிலபேர் தேவதா ஆராதனைக்கு நேத்திய மடிவஸ்திரம் இன்றைக்கு தரிக்கிறார்கள். சிலபேர் அன்றையத்தினத்து மடிவஸ்திரம் வேணுமென்கிறார்கள். இதிலேயென்ன பேதம் ஒரு வஸ்திரம் தோச்சு உலர்த்தி நாலுசாமமானால் வேறுவஸ்திரம் ரெண்டுசாமமாகுது. இதேரீதியாய் சாஸ்திரங்களும் தேசத்துக்குத்தகுந்ததாய்ப் பெரியோர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். முழுதெக்ஷிணதேசத்தில் ஸ்திரீகளுடைய சபலம் விஸ்தாரமானகையால் உடப்பிறந்தாள்குமாரன்உதிரசம்மந்தனென்றும் உதிரசம்மந்தனானகுமாரனுக்காகிலும் மருமகன் அதிகமென்றும் அறிஞ்சு அவனை தனத்துக்கும் கர்மத்துக்கும் பாத்திரனாகும்படி செய்தார்கள். திராவிடதேசத்தில் ஸ்திரீகளுக்கு சஞ்சலம் கொஞ்சமானகையால் (அர்த்தோவாயேஷஆத்மநசா) என்கிற வேதவாக்கியப்படிக்கு அவிபக்தகுடும்பத்தில் அண்ணன்தம்பிகள் இருந்தாலும் பெண்சாதிக்கு புருஷன் சொத்து பாத்தியம் உண்டென்று நேமகமாயிருக்குது. மத்தியதேசத்தில் ஸ்திரீகளுடைய சஞ்சலம் மத்தியமாயிருக்கிறத்தால் புத்திரனுடைய பாத்தியத்திலே தன் சொத்தைக்குறிச்ச பிள்ளைக்கு சர்வசுதந்திரமும் குடுத்து பிள்ளையில்லாதவளையும் புருஷனில்லாதவளையும் போஷிக்கிறத்துக்கு மாத்திரம் அதிகாரம் குடுத்து அந்த அவிபக்தியின் சொத்தை பத்தினிக்கும் சகோதரருக்கும் குடுத்தார்கள். முடிவுக்கு பெத்த தேசாசாரமும் சாஸ்திரத்துக்கும் யுக்திக்கும் விரோதமாயிராதகையால் அன்னியதேசத்தாரிடத்தில் ஆசாரம் விவகாரம் அலங்காரம் போசனம் இதுகள் பேதிச்சயிருந்தாலும் அவர்கள் பேரில் பக்திவிசுவாசமாய் அவர்களும் ஈஸ்வரசிருஷ்டிக்குள்ளே சேர்ந்தவர்களாகையால் நம்முடைய சகோதரரைப்போலவே அவர்களையும் சகலவிஷயங்களிலும் விசாரிச்சுக் கொண்டு வரவேணுமென்று தோணுது தேசசஞ்சாரம் பண்ண பெண்சாதிபிள்ளை முதலானவர்களை கூட அழைச்சுக்கொண்டு போகிற ஆசையை விடாமல் அழைச்சுக் கொண்டுவந்தால் பகவானுடைய ஆக்கினையில்லாமல் அணுவும் அசையாதென்கிற சத்தியமான சொல்லை பெரியவாள் சொலக்கேழ்விப்பட்டிருந்தும் ருசபோகமாய் ஸ்ரீராமர் இதுவரைக்கும் வழிகளிலே எனக்கு நடப்பிச்சும் சம்சார அபிமானத்தால் அயோத்திமுதலான மகாஸ்தலங்களுக்கு தேசத்திலேயிருக்கும்போது யெண்ணினப்பிரகாரம் போகலாமென்கிற நினைவை இவ்விடத்தில் விட்டுவிட்டு சர்பவழியால் தியானம் சம்பாதிக்கிறவர்களுக்கு நம்பிக்கையால் கிட்டத்தேறவேண்டியதானகையால் தன்னுடைய இஷ்டன் சொல்லுகிறதுபோலேயிருக்கிறஸ்மிருதிவாக்கியங்கள் படிக்கு கெங்காஸ்நானம் காசிவாசம் செய்து சுதேசத்துக்குவருவதாய் நினைச்சேன். சுதேசத்துக்குவரவேணுமென்கிற ஆசை மனுஷியது

ளுக்கு வுண்டாகிறகாரணம் யோசிச்சால். தேசாபிமானம்வுள்ளவர்கள் பால்லிய
முதல்கூடியிருந்த அனேகம்பேர் சுதேசத்திலே யிருக்கிறத்தாலும் மனசுக்கு
தேகம் கப்பலைப்போலே பாலகியாலும் மனசுயென்கிற கப்பல்க்காறன்சாக்கி
ரதையாயிராமல் கப்பல் ரன்னிச்சையாய் சிலகாலம் சஞ்சரிக்குமானால்க்கப்
பல்க்காறன் அதுக்கு ஆதீனமாய்ப் போய்விடுகிறது போலயிந்தமனசும் தேக
த்திணுடைய ஆதீனமாய் தேகசவுக்கியத்துக்காக சுதேசவியாபகம்வுண்டாகுது
அயிதரூபாத்திலே யிருந்து கொண்டு வந்த பிறயிவெட்டு டெண்டு யென்று
சொல்லப்பட்ட சிபாய் கூடாரங்களை யிவிடத்தில்போட்டு விட்டு புதுசாய்சம்
பாதிச்ச கூடாரம் நாலு கம்பிளிகூடாரம் வொண்ணு ஆக அஞ்சுக்கும் அதுக்குத்
தகுந்த மூங்கில்கள் முளைகளை அடியிலேபோடுகிறகில்டாய்கள்யிதுகளை யெடுக்
கருதில் ஒவ்வொண்ணுக்கு பதினஞ்சு றாடாய் விழுக்காடு ஆறுகுதிரை திட்டப்படு
த்திக்கொண்டு அயிதருபாத்திலே யிருந்து வந்த யெருதுகள் மறுபடி அவிடம்
போய் சேருகிறத்துக்கு பதினஞ்சு நாளையசம்பளம் கட்டிக்குடுத்து அனுப்பி
விட்டேன். கூடாரங்களிலே யீரத்தில் டுத்துக்கொள்ளாமல்வேண்டியமட்டாது
கபட்டி மறுபடி சோடிக்கும்படியாயும் வொருகாவடிக்காறன் யெடுக்கும்படி
